# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2017

எல்லை நிர்ணய ஆணைக்குழு

இலங்கை

## நோக்கு

நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்

## பணிக்கூற்று

அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

## நோக்கங்கள்

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க விதத்தில் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நிலைமையைப் பாதுகாக்கின்றவாறு வினைத்திறனுடன் அதனை உறுதி செய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

- தேர்தல் மாவட்டம் அல்லது நிருவாக பிரதேசம் அல்லது கல்வி, சுகாதார அல்லது பாதுகாப்பு போன்ற சமூக – பொருளாதார சேவைகளுக்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காகக் கையளிக்கப்படுகின்ற எல்லை நிர்ணய அலுவல்களை உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்தல்.

- அரசு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு சுய தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயங்களிற்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.

- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களை சேகரிக்கும் நிலையமொன்றைத் தாபித்தல்.

## *தவிசாளர் அவர்களின் செய்தி*

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2017 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2016 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாட்டின் சனத்தொகைப் பரம்பல் தொடர்ந்து மாற்றமடைந்த வண்ணம் உள்ளது. எனவே பிரதேச, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பிரதிநிதித்துவ பிரதேசங்களில் எல்லை நிர்ணய செய்தல் தொடர்பாகவும், பிரசைகளுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய அரச சேவைகள் தொடர்பாகவும் சட்டம் மற்றும் மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதால். 2016 ஆம் வருடத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாரே தற்போதைய அரசியல் யாப்பிலும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் குறிப்பிடப்படவில்லை.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட நாள் தொடக்கம் 2017ம் வருடத்தையும் அடையும் வரை எமது உறுப்பினர்கள் தேர்தல் மற்றும் நிருவாகம், அரச சேவை வழங்கல் என்பவற்றுடன் தொடர்புடைய எல்லை நிர்ணயம் தொடர்பான கடந்த கால மற்றும் தற்போதைய செயற்பாடுகளின் பலம் , பலவீனம் தொடர்பாக ஆழமான மீளாய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இந்த மீளாய்வுகளிலிருந்து தெரியவந்திருப்பது யாதெனில், அந்தந்த தேவைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அரசாங்கம் (அமைச்சர்) நியமனம் செய்கின்ற குழுவின் மூலம் குறித்த மூன்று மட்டங்களில் செய்யப்படுகின்ற எல்லை நிர்ணயங்கள் உரிய ஒழுங்கு முறையின்றி மேற்கொள்ளப்படுகின்றன என்பதாகும். இந்த கொள்கை காரணமாக எல்லை நிர்ணயம் பற்றிய செயற்பாடுகள் உரிய ஒப்புமையும், ஒத்திசைவும் இன்றிக் காணப்படுகின்றன. இந்த மூன்று மட்டங்களிலும் பயன்படுத்தப்படுகின்ற புவியியல் எல்லையினுள் வாழுகின்ற மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு என்பன சமமின்மையும் மற்றும் வேறுபாடுகளும் கொண்டவையாகும். இது தொடர்பான மீளாய்வுகளிலிருந்து தெளிவாக தெரியவந்திருப்பது யாதெனில், நாட்டடினுள் சகல புவியியல் எல்லை நிர்ணய நடவடிக்கைகளும் ஒப்புடைமை சட்டகமொன்றினுள் நிரந்தரக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டுமென்பதாகும்.

இந்தப் பின்னணியின் கீழ் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களின் மற்றும் நிருவாக பிரதேச (மாவட்ட, பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் ) மற்றும் அனைத்து அரச சேவைகள் (கமநல, கல்வி, சுகாதாரம், நீதிமன்றம், பொலிஸ், அரச நிருவாகம் போன்ற சேவைகள்) என்பவற்றுக்கான அனைத்து எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காகவும் வெளிவாரியாகச் செயற்படுகின்ற ஒரு சுதந்திர எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட வேண்டுமென எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எங்களால் செய்யப்பட்ட பரிந்துரையின் பின்னர் மாகாண சபைகள் தேர்தல்கள் தொடர்பில் ஐவர் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவுக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரையும் நியமனம் செய்ததன் ஊடாக கொள்கை வகுப்பாளர்கள் எம்மால் செய்யப்பட்ட பரிந்துரை தொடர்பாக நம்பிக்கை வைத்து அதனை கருத்திற் கொண்டமை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கையில் அனைத்து எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காகவும் சிக்கலற்ற மற்றும் சுருக்கமான பணிப்பொறுப்புடன் கூடிய ஒரு சட்டரீதியான அதிகார சபையொன்றின் கீழ் இணைத்த, ஒத்திசைவான மற்றும் சட்ரீதியான கொளகைச் சட்டகமொன்றை வகுத்துக் கொள்வதற்கு கொள்கை வகுப்பாளரகள் நடவடிக்கை எடுப்பார்களென நாம் நம்புகின்றோம்.

கே. தவலிங்கம்
தவிசாளர்
எல்லை நிர்ணய ஆணைக்குழு

## 1. பின்னணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாம் திருத்தத்திற்கமைய 41 (ஆ) மற்றும் 95 (1) உறுப்புரைகளின் கீழ் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மூவர் கொண்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு 2015.11.13 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டது. முன்னாள் நில அளவையாளர் நாயகம் கலாநிதி கே. தவலிங்கம், இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் பேராசிரியர் அனிலா டயஸ் பண்டாரநாயக்க, பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் விஞ்ஞானம் தொடர்பான முன்னாள் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர்களை இந்த எல்லை நிர்ணய ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு நிலையான அலுவலகமொன்று நில அளவையாளர் நாயகம் அவர்களின் காரியாலயத்தில் தாபிக்கப்பட்டது. 2017.12.31 திகதியாகும் போது ஆணைக்குழுவின் உள்ளடக்கமாக, தவிசாளர் உள்ளிட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவர் , பகுதி நேரச் செயலாளர் ஒருவர், பகுதி நேரக் கணக்காளர் ஒருவர், தலைவருக்காக நிரந்தர இணைப்பு அலுவலர் ஒருவர், நிருவாக அலுவலரொருவர், அரச முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர், சாரதிகள் இருவர், அலுவலகப் பணியாளர்கள் இருவர் எனக் காணப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு இரண்டு வாகனங்கள் ( மோட்டார் வாகனங்கள் ) இணைப்புச் செய்யப்பட்டிருந்தன.

### 1.1 எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமனம் செய்தல், அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பற்றிய நியதிச் சட்ட ஏற்பாடுகள்

பத்தென்பதாம் திருத்த்தினால் திருத்தியமைக்கப்பட்ட அரசியல் யாப்பின் 41 ஆ உறுப்புரையின் பிரகாரம்,

(1) ஆளெவரும் பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி, இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக சனாதிபதியினால; நியமிக்கப்படலாகாது.

(2) அத்தகைய ஆணைக்குழு எதனதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் ஆணைக்குழுக்களின் தவிசாளர்களாக அல்லது உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான தகுதியான மற்றும் உகந்த ஆட்களை அத்தகைய நியமனத்துக்கான சந்தர்ப்பம் எழுகின்ற பொழுதெல்லாம் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் பேரவையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விதப்புரைகள், பால் சமத்துவம் உட்பட வெவ்வேறு பல்லின சமூகக்குழுக்களைப் பிரதிபலித்தலை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தலும் வேண்டும். அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்களின் விடயத்தில், பேரவையானது நியமனம் செய்வதற்காக மூன்று ஆட்களை விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், சனாதிபதி விதந்துரைக்கப்பட்ட ஆட்களில் ஒருவரைத் தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி அத்தகைய நியமனங்களுக்கான பேரவையின் விதப்புரைகளைப் பெற்றுக் கொண்ட பதின்நான்கு நாட்களினுள், இவ்வுறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய பதினான்கு நாட்களுக்குள் அவசியமான நியமனங்களைச் செய்யத் தவறும் பட்சத்தில் -

(அ) ஆணைக்குழுவொன்றின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி

முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

ஆ) ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு (3) ஆம் பந்தியின் கீழ் விதந்துரைக்கப்பட்ட பெயர்கள் பட்டியலில் எவரின் பெயர் முதலாவதாக உள்ளதோ அவர், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற தேதியிலிருந்து பயன்பட, ஆணைக்குழுவின் தவிசாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின் ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் ஆளொருவர் அல்லது ஏதேனும் அத்தகைய ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராகப் பதிற் கடமையாற்றவென நியமிக்கப்படும் ஆளொருவர், அரசியலமைப்பில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, பேரவையின் முன்னங்கீகாரத்துடன் மட்டுமே அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதலும் வேண்டும்.

(6) தேர்தல் ஆணைக்குழு தவிர்ந்த, ,இவ்வுறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆணைக்குழுக்களும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாதலும் வகைசொல்லற்பாதலும் வேண்டும்.”

அட்டவணை

(அ) தேர்தல் ஆணைக்குழு.
(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.
(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு
(ஈ) கணக்காய்வு சேவை ஆணைக்குழு.
(உ) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
(ஊ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
(எ) நிதி ஆணைக்குழு.
(ஏ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.
(ஐ) தேசிய பெறுகை ஆணைக்குழு.

**95**

(1) அரசியலமைப்புத் தொடங்கிய பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாகத் தேர்தல் மாவட்டங்களை வரையறுப்பதற்காக சனாதிபதி வரையறை ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். அது சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும். அவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடாதவர்களெனச் சனாதிபதி திருப்பதியுறுதல் வேண்டும். அத்தகைய ஆட்களுள் ஒருவரைச் சனாதிபதி தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

(2) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரெவருவரும் இறந்தால் அல்லது பதவிதுறந்தால், அல்லது அத்தகைய உறுப்பினரெவரும் அத்தகையவராக அவரது பணிகளை நிறைவேற்றவதற்கு இயலாதவராகிவிட்டாரெனச் சனாதிபதி திருப்தியுற்றால், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சனாதிபதி அவரது இடத்தில் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

**96**

(1) வரையறை ஆணைக்குழு இலங்கையை இருபதுக்குக் குறையாததும் (இருபத்தைந்துக்கு) மேற்படாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்து அவற்றிற்குப் பெயர்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றும் அதுவே ஒரு தேர்தல் மாவட்டமாக அமையலாம். அல்லது மாகாணம் ஒவ்வொன்றும் இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

(3) மாகாணமொன்று பல தேர்தல் மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமிடத்து, வரையறை ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் ஒரு நிருவாக மாவட்டமாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய நிருவாக மாவட்டங்களின் சேர்க்கையாக இருப்பதனை, அல்லது இரண்டோ பலவோவாய தேர்தல் மாவட்டங்கள் ஒன்று சேர்ந்து நிருவாக மாவட்டமொன்றாக இருப்பதனை இயலக்கூடிய அளவுக்கு உறுதிப்படுத்தும் வண்ணம் அப்போதுள்ள நிருவாக மாவட்டங்களைக் கருத்துக்கெடுத்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள தேர்தல் மாவட்டங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நான்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவாதல் வேண்டும் : (இது அத்தகைய தேர்தல் மாவட்டங்களின் தேருநர் இடாப்பில் தம் பெயர்களைக் கொண்டிருக்கும் தேருநர்களின் எண்ணிக்கையைத் தொடர்புறுத்திப் பார்க்கும் போது எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டங்கள் தெரிவு செய்து அனுப்புவதற்கு உரித்துடையனவோ அத்தனை உறுப்பினர்களைவிடப் புறம்பானது) : வரையறை ஆணைக்குழுவானது அவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உரித்தாயுள்ள எண்ணிக்கையை அத்தகைய தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் ஒப்புரவான முறையில் பங்குபோடல் வேண்டும்.

(5) வரையறை ஆணைக்குழுவின் உறுப்பினரிடையே அபிப்பிராய வேறுபாடு உள்ளவிடத்து, அவர்களில் பெரும்பான்மையினரின் அபிப்பிராயமே மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், அதுவே ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் முடிவாகக் கருதப்படுதலும் வேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் வித்தியாசமான அபிப்பிராயத்தை உடையவராயிருக்குமிடத்து, தவிசாளரின் அபிப்பிராயமே ஆணைக்குழுவின் முடிவெனக் கருதப்படுதல் வேண்டும். வேறுபடும் அபிப்பிராயங் கொண்ட உறுப்பினர் எவரும் அவ்வாறு வேறுபடுவதற்குத் தமக்குள்ள காரணங்களைக் கூறலாம்.

(6) வரையறை ஆணைக்குழுவின் தவிசாளர், ஆணைக்குழுவின் முடிவுகளை, வேறுபடும் அபிப்ராயங்களைக் கொண்ட உறுப்பினரால் கூறப்பட்ட காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றோடு சேர்த்து சனாதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

## 1.2 தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் நியதிச்சட்ட ஏற்பாடுகளில் காணப்படும் வரையரைகள்

எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமனம் செய்தல் மற்றும் பிரதான பணிகள் அரசியல் யாப்பின் 95 மற்றும் 96 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஏனைய ஆணைக்குழுக்கள் போன்று இந்த ஆணைக்குழு தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அரசியல் யாப்பில் அல்லது பத்தொன்பதாம் அரசியல் யாப்புத் திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

- ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் (Functions)
- ஆணைக்குழுவின் தத்துவங்கள் (Powers)

மேலும் தற்போதைய அரசியல் யாப்பில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு பொறுப்புகள் கையளிப்பொன்று ( Mandate ) செய்யப்படவில்லை நிரந்தரமாகப் பணிகளை ஆரம்பிப்பதற்காக தமக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்ற பாராளுமன்றச் சட்டதிட்டங்கள் வகுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் எல்லை நிர்ணய ஆணைக்குழு உள்ளது.

## 2. கொள்கை ரீதியான விடயங்கள்

### 2.1 உத்தேச எல்லை நிர்ணய ஆணைக்குழுச் சட்டம்.

இலங்கையில் தேர்தலகள், நிருவாகமட் மற்றும் அரச சேவைகளை வழங்குவது தொடர்பாக பயன்படுத்தியுள்ள எல்லை நிர்யணங்கள் தொடர்பாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட மீளாய்வுகளிலிருந்து தெரியவந்திருப்பதாவது, அந்தந்த தேவைபாடுகளுக்காக ஆராய்ந்து பார்த்து திட்டமொன்றை தயாரிக்குமாறு அரசாங்கம் ( அமைச்சர் ) நியமிக்கும் குழுவினால் தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்டங்கள் மூன்றில் செய்யப்படும் எல்லை நிர்ணயங்கள் உரிய ஒழுங்கு முறையின்றி செய்யப்படுகின்றன என்பதாகும். இந்தக் கொள்கை காரணமாக எல்லை நிர்ணய செயற்பாடுகளில் உரிய ஒத்ததன்மை அல்லது ஒத்திசைவு இல்லை. இந்த மூன்று மட்டங்களில் பயன்படுத்தியுள்ள புவியியல் எல்லைகளினுள் வாழுகின்ற் மக்கள் தொகை மற்றும் நிலப்பரப்பு என்பவற்றுக்கிடையில் பாரிய சமமின்மை மற்றும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது தொடர்பான மீளாய்வுகளிலிருந்து தெளிவாக தெரியவந்திருப்பதாவது, நாட்டினுள் சகல புவியியல் எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காகவும் ஒத்ததன்மையுடைய சட்டகமொன்றினுள் நிரந்தரக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் என்பதாகும்.

அதன் பின்னர் தனியான சுதந்திர எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கீழ் நாட்டின் சகல எல்லை நிர்ணய நடவடிக்கைகளையும் சட்டரீதியாக மேற்கொள்வதற்கான கொள்கைகளை முன்னெடுப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு கடந்த இரண்டு வருடங்கள் முழுவதும் முயற்சிகளை மேற்கொண்டது. 2016 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் " அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்களை விஸ்தரித்தல்" என்ற தலைப்பில் கொள்கைப் பிரேரணையை அரசியல் அமைப்புப் பேரவையின் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பி வைக்கப்பட்டது. மேற்படி முன்மொழிவு அரச சேவைகள் பற்றிய பாராளுமன்ற உப குழுவின் செயலாளருக்கும் 2016 ஆம் ஆண்டில் அனுப்பி வைக்கப்பட்டது. உப குழு அந்த முன்மொழிவுகளை கருத்திற் எடுத்துக்கொண்டது. புதிய அரசியல் யாப்பொன்றைத் தயாரிக்கும் ஏற்பாடு போது அரசியல் அமைப்புப் பேரவையின் மூலம் கருத்திற் கொள்வதற்காக" இலங்கையில் எல்லைச் நிர்ணயத்திற்கான கோட்பாடுகள் மற்றும் கொள்கைகள் சட்டகம்" என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஆவணம் அரசியல் யாப்பு வழிநடாத்தல் குழுவின் தவலைவரான கௌரவ பிரதமர் அவர்களுக்கு அனுப்பப்பி வைக்கப்பட்டது.

அண்மையில் சனாதிபதி செயலகம் மற்றும் சபாநாயகர் ஆகியோருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இந்த முன்மொழிவு தொடர்பாக வினவப்பட்ட சந்தர்ப்பத்தில் தனியான சுதந்திர எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் தொடர்பான சட்டமூலம் ஒன்றைத் தயாரிக்குமாறு சனாதிபதியின் செயலாளர் அவர்களால் நீதி ஆணைக்குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. மேற்படி கலந்துரையாடல்களின் அடிப்படையில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக கொள்கைப் பத்திரமொன்று (இணைப்பு - 3) தயாரிக்கப்பட்டு சனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதனை அமைச்சரவையில் கலந்துரையாடுவதற்காக தேவையான அடிப்படைத் தகவல்கள் மற்றும் முன்மொழிவுகள் சகிதம் இத்துடன் (கொள்கைப் பத்திரம் பின்னிணைப்பொனறாக உட்சேர்த்து) அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்குமாறு சனாதிபதி செயலகத்தினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அமைச்சரவைப் பத்திர வரைவு ( இணைப்பு 3A ) 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் போது சனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்போது எல்லை நிர்ணய ஆணைக்குழு இந்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பாக வழங்கப்படுகின்ற பதிலை எதிர்பார்த்த வண்ணம் உள்ளது.

## 2.2 மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகள் தொடர்பாக எல்லைகளை நிர்ணயம் செய்தல்

### 2.2.1 பின்னணி

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு இசைவானதாக ஒன்பது மாகாண சபைகள் தொடர்பாக தேர்தல்கள் நடத்துவதற்கும் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களை மேற்கொள்வதற்கும் சட்டம் 1988.01.27 திகதி சான்றுப்படுத்தப்பட்ட பின்னர் 1988.02.02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.முதன்மை கட்டளைச் சட்டத்திற்கமைய மாகாணத்தினுள் காணப்படும் நிருவாக மாவட்டங்கள் தேர்தல்கள் பிரதேசமாக அழைக்கப்பட்டதோடு விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் முழு சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்படி முறையினுள் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக 2017 ஆம் ஆண்டின் 17 இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் ( திருத்தச் ) சட்டம் பாராளுமன்றத்தினால் 2017.09.20 திகதி நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் நிருவாக மாவட்டமொன்றில் பிரதிநிதிகள் ஐம்பது வீதம் எளிய பெரும்பான்யின் அடிப்படையில் கலப்புத் தேர்தல் முறையின் கீழ் தெரிவு செய்து கொள்ளவும் மீதியை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் தெரிவு செய்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் செய்யப்பட்டன.

2017ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தில் “ ஐவர் கொண்ட எல்லை நிர்ணய குழுவொன்று சனாதிபதியினால் நியமனம் செய்யப்படும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகளை வேறுபிரிப்பதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய இரண்டு உறுப்பினர்கள் மற்றும் மேலும் இரண்டு உறுப்பினர்கள் கொண்ட ஐவர் அடங்கிய எல்லை நிர்ணய குழுவொன்று சபாநாயகர் அவர்களால் சனாதிபதி வர்களுக்கு முன்மொழியப்பட்டது. மாகாண சபைகளுக்கு நிருவாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்கள் 50% வீதம் எளிய பெரும்பான்மை முறையில் நியமனம் செய்வதற்கு ஏற்ற விதத்தில் தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்வதற்காக சனாதிபதி அவர்களால் 2017.10.04 திகதி மாகாண சபைகள் எல்லை நிர்ணய ஐவர் கொண்ட குழு ( மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழு ) நியமனம் செய்யப்பட்டது.

இந்த குழுவுக்கு தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளரும் ஏனைய அங்கத்தவர்களும் உள்ளடக்கப்பட்டனர். எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மாகாண சபைகள் எல்லை நிர்ணய குழுவின் தவிசாளர் ஆவார். அதற்குரிய அறிவித்தல் 2017.10.04 ஆம் திகதிய 2039/29 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அதன் உறுப்பினர்கள் விபரம் கீழ் வருமாறு.

கலாநிதி கே. தவலிங்கம் ( தவிசாளர் )
பேராசிரியர் எஸ். எச். ஹஸ்புல்லாஹ் ( உறுப்பினர் )
கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க ( உறுப்பினர் )
திரு.பி.எம். சிறிவர்தன ( உறுப்பினர் )
திரு.எஸ். விஜேசந்திரன் ( உறுப்பினர் )

மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவினால் மேலதிக தேர்தலகள் ஆணையாளர் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளரான திரு சமன் சிறி ரத்நாயக்க அவர்கள் மாகாண சபை எல்லை நிர்ணய குழுவின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். எல்லை நிர்ணய செயற்பாடுகளை நிறைவு செய்து குழு நியமிக்கப்பட்ட திகதி முதல் 04 மாத காலப்பகுதியினுள் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிப்பது மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் பொறுப்பாகக் காணப்பட்டது. மேற்படி பொறுப்பை நிறைவேற்றுவதற்கு மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழு உடனடியாக நடவடிக்கைகளை ஆரம்பித்து. 2017ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாத காலப்பகுதியினுள் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

**2.2.2 மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்வதற்குரிய சட்டம்.**

2017ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 3அ (1) தொடக்கம் 3அ (2) வரையான பிரிவுகளுக்கமைய மற்றும் சனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களுக்கேற்ப மாகாண சபைகள் எல்லை நிர்ணய குழுவின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் பின்வரும் வகையில் குறிப்பிட முடியும்.

I. 2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் ( திருத்தச் ) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி மாகாண சபையொன்றுக்கு ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் பணியாக அமைந்தது அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட 50% வீதமான உறுப்பினர் எண்ணிக்கையை முதன்மைச் சட்டத்தின் 3அ(4) பரிவையும் கருத்திற் கொண்டு தேர்ந்த்தெடுத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதாகும். அதன் மூலம் 50% உறுப்பினர்கள் எண்ணிக்கையை முடிவு செய்யும் மேலதிகப் பொறுப்பும் மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவுக்கு கையளிக்கப்பட்டது. குழு கவனம் செலுத்த வேண்டிய சட்டத்தின் 3அ (4) மற்றும் ஏனைய பிரதான விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் பின்வருமாறு.

" (4) நிருவாக மாவட்டங்களை தேர்தல் தொகுதிகளாகப் பிரிப்பதில் பின்வரும் காரணிகள் குழுவினால் கவனத்தில் கொளளப்படுதல் வேண்டும்.

(அ) இன , மத அல்லது வேறு வகையாக அக்கறைப் பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட ஆனால் அப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனத் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது அத்தகைய நிருவாக மாவட்டங்களைத் தேர்தல் தொகுதிகளாகப் பிரிவிடலாம்.

(ஆ) அத்தகைய பிரிவிடுகையைச் மேற்கொள்ளும் போது ஆணைக்குழு பின்வரும் விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

அதாவது:

(i) மாகாணத்தினுள்ளான நிருவாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக்குறைவானதாக்குவதன் விருப்புத் தன்மை: அத்துடன்

(ii) தேர்தல் தொகுதிகளின் புவியியல் சார் மற்றும் பௌதீக சிறப்புக் கூறுகள்

II. முதன்மைச் சட்டத்தின் 3 அ (4) காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப ஏதாவது மாவட்டமொன்றிட்கு ஒரு உறுப்பினருக்கு மேற்பட்ட உறுப்பினர் எண்ணிக்கையொன்றைத் தெரிவு செய்ய வேண்டுமெனக் குழு கருதுமாயின் பல் உறுப்பினர் தொகுதிகளை வேறுபிரிப்பதற்கு குழுவுக்கு முடியும்

III. மாவட்டமொன்றை தேர்தல் தொகுதிகளாகப் வேறுபிரிக்கும் போது தேர்தல் தொகுதிகளுக்கு இலக்கமொன்றையும் மற்றும் பெயரையும் வழங்குவதற்கும் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதும் குழுவின் பொறுப்பாகும்.

IV. தமது பொறுப்பு நிறைவேற்றுவதற்கான நடைதமுறைத்திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும், தேவையான உத்தியோகத்தர்கள், கல்வியலாளர்கள், தொழில்நுட்பக் குழு மற்றும் உப குழு என்பனவற்றை நியமனம் செய்து கொள்வதற்கான அதிகாரம் குழுவுக்குண்டு.

v. தாம் நியமனம் செய்யப்பட்ட தினம் தொடக்கம் 4 மாத காலப்பகுதியினுள் தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணய அறிக்கை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்குக் கையளித்தல் வேண்டும்.

அமைச்சர் அறிக்கை கையளிக்கப்பட்டு 2 வார காலத்தினுள் மூன்றில் இரண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பாராளுமன்றம் அங்கீகரிக்கவில்லையெனில் 2017 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின் 4(12) முதல் 4(14) வரையான உப பிரிவுகளின் கீழ் கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையிலான மீளாய்வுக் குழுவொன்று சபநாயர் அவர்களால் நியமனம் செய்யப்படும்

மீளாய்வுக் குழு பிரதமரின் தலைமையில் இருக்க வேண்டுமென்பதுடன் ஐந்தாட்களைக் கொண்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். சட்டத்திற்கமைய மீள்நோக்கு அறிக்கை 2 மாதங்கள் காலப்பகுதியினுள் சனாதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மீளாய்வுக் குழு அறிக்கை கிடைத்தவுடன் ஜனாதிபதி தேர்தல் தொகுதிகளின் பெயர்கள் மற்றும் அதன் எல்லைகளை பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

2004 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் ( திருத்தச் ) சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையின் கீழ் 2012 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீட்டுவசதிகள் கணக்கெடுப்புக்கமைய (2012 ச.தொ.ம) அந்தந்த மாவட்டத்திற்காக தேர்தல் ஆணைக்கழுவினால் நிர்ணயிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரினால் 2017.10.06 ஆம் திகதிய LAE/பொது ஆம் இலக்க கடிதத்தின் மூலம் எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

### 2.2.3 குழுவின் விடயப்பரப்பு

2012 ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் வீட்டுவசதிகள் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு தற்போது அந்தந்த நிருவாக மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர் எண்ணிக்கையில் அரைவாசியைத் தெரிவு செய்து கொள்வதற்காக தேர்தல் தொகுதிகள் தாபிக்கப்படல் வேண்டும். இதன் காரணமாக ஏதேனும் மாவட்டமொன்றின் தேர்தல் தொகுதிகள், வேறு நிர்வாக மாவட்டமொன்றில் தாபிக்கப்படுகின்ற தேர்தல் தொகுதியொன்றினுள் உள்ளடங்கும் மக்கள் எண்ணிக்கைக்குமிடையில் வித்தியாசம் காணப்படுவதற்கு பெரும்பாலும் வாய்ப்புண்டு. மாவட்டங்களின் சனத்தொகை அடர்த்தி வேறுபாடுகள் காரணமாக தோன்றக் கூடிய இந்த நிலைமைகளை சமநிலைப்படுத்துவதற்கான சாத்தியம் குழுவுக்கு இருக்கவில்லை.

ஒவ்வொரு நிர்வாகமாவட்டத்திற்கும் சொந்தமான நிலப்பரப்பு பிரதேசத்தினுள் இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொதுவான நிருவாக நடவடிக்கைகளுக்கான நிருவாக பிரிவு அலகுகள் பல உள்ளன. அதாவது கிராம அலுவலர் பிரிவுகள், மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் போன்ற அடிப்படையில். இந்த அதிகார பிரதேசங்கள் சட்டரீதியாக தாபிக்கப்படடிருத்தல், வரைபடமாக்கப்பட்டிருத்தல் மற்றும் இலங்கையில் சனத்தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்படி அலகுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் காரணமாக இந்த அலகுகளின் எல்லைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த எல்லைகள் மீறப்படும் விதத்தில் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை ஏற்படுத்தி தேர்தல் தொகுதிகளில் சனத்தொகையை சமநிலைப்படுத்தும் போக்கொன்றை இங்கு பின்பற்றுவதற்கான சாத்தியம் குழுவுக்கு காணப்படவில்லை.

ஒன்பது மாகாணங்களினுள் அமையப்பெற்றுள்ள 25 நிர்வாக மாவட்டங்களிலிருந்து மாகாண சபைகளுக்கு தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் 437 உறுப்பினர்களில் 222 பேரைத் தெரிவு செய்வதற்காக, பொருத்தமான தேர்தல் தொகுதிகள் எண்ணிக்கையை வேறுபிரித்தல் பணிகளை 4 மாதங்கள் காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்றகாக குழு துரிதமாகச் செயற்பட்டது.

### 2.2.4 நடைமுறைத் திட்டம்

மாகாண சபைகள் எல்லை நிர்ணய குழுவின் ஆரம்பக் கூட்டம் தவிசாளரின் தலைமையில் மற்றும் அதன் ஏனைய எல்லா உறுப்பினர்களினதும் பங்களிப்புடன் 2017ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 09 ஆம் திகதி எல்லை நிர்ணய ஆணைக்குழு அலுவலகத்தில் நடாத்தப்பட்டது. எல்லை நிர்ணய ஆணைக்குழு அலுவலகம் மற்றும் அதன் ஆளணியினரை மாகாண சபைகள் எல்லை நிர்ணய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்வதற்கு குழு உறுப்பினர்கள் ஐவரும் ஏகமனதாக இனக்கம் தெரிவித்தனர். ஆரம்பக் கூட்டத்தில் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவு செய்வதற்குள்ள கால எல்லையைக் கருத்திற் கொண்டு அதற்குரிய நடைமுறைத் திட்டத்தைத் தீர்மானித்தல், திருத்தியமைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ (2) பிரிவின் படி ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தில் தொகுதிகளின் கீழ் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களி எண்ணிக்கையை முடிவு செய்தல் தொடக்கம் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டம், தொகுதிகளை வேறுபிரித்தல் செயற்பாடுகள் தொடர்பாக உரிய தரப்புக்களை அறிவூட்டல், முன்மொழிவுகளை மீளாய்வு செய்தல், தேர்தல் தொகுதிகளை வேறுபிரித்தல் தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரித்தல் வரையிலான சகல நடவடிக்கைகளையும் முடிவுறுத்த வேண்டிய விதம் மற்றும் அதற்காகச் செலவிட வேண்டிய காலப்பகுதிகள் முதலாவது கூட்டத்திலேயே தீர்மானித்துக் கொள்ளப்பட்டது. 2017.10.04 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 வரை மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழு 13 தடவைகள் கூட்டங்களை நடாத்தியுள்ளது. ( 4.1.2 பந்தியைப் பார்க்கவும் )

எல்லை நிர்ணய செய்யும் குழு மாவட்ட மட்டத்தில் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து மாவட்டங்களதும் அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளரின் பங்களிப்புடன் மற்றும் மாவட்டத்தின சிரேட்ட நிலஅளவை அத்தியட்சகரின் மற்றும் மாவட்ட பிரதி/ உதவி தேர்தலகள் ஆணையாளர்கள் உள்ளடங்கும் விதத்தில் உபகுழுவொன்று வீதம் நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இந்த எல்லை நிர்ணய அசயற்பாடுகள் தொடர்பாக அரசியல கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை அறிவுறுத்தி , இதற்காக முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான விளம்பரம் 2017.10.13 ஆம் திகதிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதோடு, உரிய முன்மொழிவுகளை 2017.11.02 திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் அந்த அறிவித்தல் மூலம் உரிய தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கு மேலதிகமாக, பாராளுமன்ற உறுப்பினர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அழைபப்பு விடுக்கப்பட்டது.

பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.11.09 ஆம் திகதி தொடக்கம் தொடக்கம் 2017.12.08 ஆம் திகதி வரை 25 மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்களில் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.2.5 எல்லை நிர்ணய குழு தேர்தல் தொகுதிகளைப் வேறுபிரிக்கும் போது பயன்படுத்திய நியதிகள்

2017ஆம் ஆண்டின சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்டவாறு பிரதான கட்டளைச்சட்டத்தின 3அ (1) முதல் 3அ (11) வரையான பிரிவுகள் மூலம், குழு தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணய செய்யும் போது பின்பற்ற வேண்டிய செயலொழுங்குகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இசசெயற்பாட்டின் போது அனைத்து தேர்தல் தொகுதிகள் எல்லை

நிர்ணயம் செய்தல் தொடர்பாக, குழு ஒருமித்த தீர்மானங்களுக்கு வந்து செயற்படுவதை உறுதிசெய்தல் கட்டாயமாகும். அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் , குழுவுக்கு கிடைக்கப் பெற்ற முன்மொழிவுகள் மற்றும் பத்திரங்கள் என்பவற்றை ஆராய்து பார்த்து செயற்படுவதற்கு குழுவினால முடிவு செய்யப்பட்டது.

**I. 3 அ (2) பிரிவு: தேர்தல் தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50% இற்கு சமமான உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.**

நிருவாக மாவட்டங்களின் நிலத்தின் பரப்பளவு மற்றும் 2012 இறுதி சனத்தொகை மற்றும் குடியிருப்புக் கணக்கெடுப்பு என்பவற்றைக் கருத்திற் கொண்டு தேர்தல் ஆணையாளரால் மாகாண சபைக்கு ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்தல் தொகுதிகள் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50% க்கு உரிய உறுப்பினர் எண்ணிக்கையை, குழுவுக்கு முடிவு செய்வதற்கு நேரிட்டது. அந்த எண்ணிக்கையை கணிப்பீடு செய்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை இரண்டினால் வகுக்கப்பட்டது. அவ்வாறு வகுக்கும் போது 25 மாவட்டங்களில் 18 இற்கு தொகுதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர் எண்ணிக்கை முழு எண்ணிக்கையாகும். ஏனைய மாவட்டங்களில் குறித்த அந்த எண்ணிக்கை முழுமையான மற்றும் பின்ன எண்ணிக்கைகயைக் கொண்டவையாக இருந்தமையினால் அவை கிட்டிய முழுமையான எண்ணிக்கைக்கு கணக்கிடப்பட்டு உரிய எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

**ii. 3 அ (3) ஆம் பிரிவு: தேர்தல் தொகுதிகளைப் பெயர் குறித்தளித்தல்**

தேர்தல் தொகுதியொன்றுக்கு உரித்துடைய பிரதேசமொன்றை அழைப்பதற்கு வரலாற்று ரீதியில் அங்கீகரிக்கப்பட்டபெயரொன்று இல்லாத போது, தேர்தல் தொகுதிகளை பெயர்குறித்தல் ஒருமித்த வழிமுறைக்கமைய மேற்கொள்ள வேண்டும் என குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய தேர்தல் தொகுதிக்கு உட்படுகின்ற அதிகமான கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை உட்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவின் பெயரிலேயே குறித்த தேர்தல் தொகுதியை பெயர்குறிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

**III. 3அ (4): நிருவாக மாவட்டங்களை தேர்தல் தொகுதிகளாகப் பிரிவிடல்**

வதிந்துள்ளவர்களுக்கு இலகுவாக பிரவேசிக்கக் கூடியவாறு பிரதேசத்தில் காணப்படும் நீர்பரப்பு மற்றும் மலைப் பிரதேசங்கள் தொடர்பாகவும் உரிய கவனம் செலுத்தி தேர்தல் தொகுதியொன்று தொடர்புடைய பிரதேசமொன்றாக அமைய வேண்டுமென குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. நடைமுறைப் பணிகளுக்காக வேறு தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் பிரிந்து செல்வதை குறைத்துக்கொள்ளும் தேவைப்பாடும் இனங்காணப்பட்டதுடன் அனைத்துக் சமூக அறிவியல் சார்ந்த தகவல்கள், கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஆகிய நிருவாக அலகுகளுக்கு ஏற்ப மாத்திரம் பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் அந்தத் தகவல்களை எல்லை நிர்ணயத்தின் போது அடிப்படையாகக் கொள்வதற்கு குழுவினால் முடிவு செய்யப்பட்டது. மிகச் சிறிய நிர்வாக அலகான கிராம அலுவலர் பிரிவுகளை வேறு பிரிக்காதிருப்பதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே இயன்றவரை செயலாளர் பிரிவுகளில் வேறுபிரிப்புக்களை செய்யாதிருக்கவும் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் ஏதேனும் விசேட நியதிகளைப் பாதுகாப்பதற்கான தேவைப்பாடொன்று ஏற்பட்டால் அவைகளை தொடர்புடைய கிராம அலுவலர் பிரிவுகளின் கூட்டாக வேறுபிரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**V. 3 அ (4) (ஆ) (i) பிரிவு: மாவட்டத்தினுள் தேர்தல் தொகுதிகளுக்கிடையில் சனத்தொகை சமமின்மையைக் குறைத்தல்**

மாவட்டத்தின் மொத்த சனத்தொகை, தொகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையினால் வகுக்கும் போது ஏதேனும் சமமின்மை ஏற்படுவதனை தவிர்க்கும் பொருட்டு, ஆரம்பமாக குழுவினால் மாவட்டத்தினுள் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதிகளுக்கு உட்படும் சனத்தொகையின் சராசரி கணிப்பீடு செய்யப்பட்டது. தேர்தல் தொகுதிகளை வேறு பிரிக்கும் போது அங்கு வசிக்கின்ற ஏதேனும் தொடர்பொன்றைக் கொண்ட சமூகத்தவரின் தேவைப்பாடுகள் மற்றும் தொகுதியின் புவியியல் அல்லது பௌதீக அம்சங்களைக் கருத்திற்கொள்ளும் போது ஏதேனும் ஓர் அளவில் சமமின்மை ஏற்படுவதை தவிர்க்க முடியாதென்பதால், மாவட்டமொன்றின் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதிகளுக்கிடையிலான சமமின்மையான சனத்தொகையின் குறைவை அல்லது அதிகரிப்பை 10% இற்கு மட்டுப்படுத்துவதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

**V. 3அ (5) மற்றும் 3அ (6) பிரிவுகள்: பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை ஏற்படுத்தல் மற்றும் தொகுதியொன்றிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல்.**

சட்டத்தின் 3 அ (4) (ஆ) (1) ஆம் உட்பிரிவைக் கருத்திற் கொண்டு, மாவட்டமொன்றில் தேர்தல் தொகுதியொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒவ்வொரு உறுப்பினர் மூலமும், அந்த மாவட்டத்தின் ஆட்கள் தொகையொன்றை இயன்றவரை பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும். அவ்வாறே, பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியொன்றில் மக்கள் தொகை, தனி உறுப்பினர் தேர்தல் தொகுதியொன்றில் வசிப்பவர்களின் எண்ணிக்கையில் இருமடங்காக இருக்க வேண்டும் எனக் குழு தீர்மானித்தது. இதனால் குறித்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளைத் தாபிப்பதற்குப் பதிலாக சாத்தியமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அத்தகைய விசேட சந்தர்ப்பங்களின் போது தேர்தல் தொகுதிகள் மேற்படி பிரதேசத்தில் பல் இன மக்கள் உள்ளடங்கிய விதத்தில் எல்லை நிர்ணய செய்வதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களின் போது சாத்தியமான எல்லா சந்தர்ப்பங்களிலும் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களால் தொடர்பு காணப்படுகின்ற பல்வேறு சமூகங்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற நோக்கம் நிறைவேறத்தக்கவாறு மேற்படி சமூகத்தவர்கள் குறிப்பான தேர்தல் தொகுதிகளுக்கு ஒன்று சேரும் வகையில், குழுவினால் அத்தகைய தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டன.

### 2.2.6 தோற்றிய பிரதிநிதித்துவம் பற்றிய பகுப்பாய்வு

குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற பிரேரணைகளின் எண்ணிக்கை 678 ஆகும். ( எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 294 ஆகும்) அவை மாவட்ட அடிப்படையில் கிடைக்கப் பெற்ற விதம் கீழே 2. 1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1: ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களின் கீழ் கிடைக்கப்பெற்ற பிரேரணைகளின் எண்ணிக்கை

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற பிரேரணைகள் மற்றும் பத்திரங்களின் எண்ணிக்கை | முல்லைத்தீவு | கிடைக்கப்பெற்ற பிரேரணைகள் மற்றும் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| I | II | III | IV |
| கொழும்பு | 22 | முல்லைத்தீவு | 17 |
| கம்பஹா | 40 | மட்டக்களப்பு | 58 |

| I | II | III | IV |
|---|---|---|---|
| களுத்துறை | 40 | அம்பாறை | 67 |
| கண்டி | 41 | திருக்கோணமலை | 59 |
| மாத்தளை | 15 | குருநாகல் | 17 |
| நுவரெலியா | 34 | புத்தளம் | 35 |
| காலி | 21 | அனுராதபுரம் | 14 |
| மாத்தறை | 07 | பொலன்னறுவை | 06 |
| அம்பாந்தோட்டை | 06 | பதுளை | 15 |
| யாழ்ப்பாணம் | 12 | மொனராகலை | 19 |
| கிளிநொச்சி | 23 | இரத்தினபுரி | 20 |
| மன்னார் | 39 | கேகாலை | 25 |
| வவுனியா | 26 | மொத்தம் | 678 |

சமர்ப்பிக்கப்பட்ட முனமொழிவுகள் தொடர்பாக விரிவாக ஆராயும் போது பிரதானமான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த தரப்பினரின் கருத்து மற்றும் அவற்றிலிருந்து குழுவினால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் என்பவற்றை பின்வரும் வகையில் சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.

(அ) தற்போது நிருவாக மாவட்டங்களுக்கு உட்படுகின்ற சில கிராம அலுவலர் பிரிவுகள், அதைவிடவும் பெரிய பிரதேசங்கள் மற்றும் மாவட்ட செயலாளர் அலுவலகத்திலிருந்து மக்களுக்கு பெற்றுக் கொள்ள வேண்டிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிரமமான விதத்தில் இணைப்புச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளதாக பிரதிநிதிகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவை தொடர்பாக இந்த குழுவுக்கு தீர்வு வழங்குவதற்கு முன்மொழிவு சமர்ப்பிக்க முடியாதெனினும், குழுவினால் தேர்தல் தொகுதிகளை வேறு பிரிக்கும் போது அந்த வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளுடன் சிறந்த வகையில் வாக்காளர்கள் தொடர்புபட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்கவாறு தொகுதிகளை பிரிவிடல் தொடர்பில் சில தரப்பினர்களால் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

(ஆ) மாகாண சபைத் தேர்தல் தொகுதிகள் பிரிவிடல் செய்வதற்கு முன்னர், செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசம், பிரதிநிதிகள் வட்டாரங்கள் வேறுபிரிக்கப்பட்ட போது ஏதேனும் தரப்பினருக்கு ஏற்பட்ட பாதகமான நிலைமைகள் பற்றிய விடயங்களும் குழுவிடம் சில முகவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன. அத்தகைய விடயங்களையும் கருத்திற் கொண்டு, மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளைப் பிரிவிடும் போது அத்தகைய நிலைமைகள் எற்படாதிருப்பதை உறுதி செய்து கொள்வதற்காக குறித்த தரப்பினர், குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அவதானிக்க முடிந்தது.

(இ) தேர்தல் தொகுதிகளைப் பிரிவிடும் போது, மாகாணங்களில் அமையப் பெற்றுள்ள நிர்வாக மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் தொகை பற்றி குழு கவனம் செலுத்துகையில் , இறுதியாக நடைபெற்ற 2012 சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பின் அடிப்படையில் செயற்படுதல் அவ்வளவு பொருத்தமானதல்ல எனவும் சில முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. விசேடமாக 1980 தசாப்தத்தின் நடுப்பகுதி தொடக்கம், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமைகள் காரணமாக மேற்படி மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் இது வரை அவர்கள் முதல் வசித்த பிரதேசங்களில் மீள்குடியேற்றம் செய்து நிறைவடையவில்லை என்பதால், 2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பில், அத்தகைய மக்கள் பிரிவினரின் தகவல்கள் உள்ளடக்கப்படாமை அத்தகைய முன்மொழிவுகள் முன்வைக்கப்படுவதற்கான காரணமாகும். அவர்களின் கருத்துப்படி அத்தகைய பிரதேசங்களில் சரியான சனத்தொகை எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்வதெற்கெனில் 2016 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்புத் தகவலகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ஈ) 1988 ஆம் ஆண்டு தொடக்கம் மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாவட்டங்களில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் பிரிவுக்கு அப்பாற்பட்ட மக்கள் பிரிவினரின் பிரதிநிதித்துவத்திற்காக நியாயமான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததாக, முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த அனைத்து சிறுபான்மை மக்கள் பிரிவினரின் கருததாக அமைந்திருந்தமை குழுவுக்கு கிடைத்த முன்மொழிவுகள் ஊடாக தெரியவந்த ஒரு விடயமாகும். புதிய மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளை வேறுபிரிக்கும் போது மற்றும் நிருவாக மாவட்டங்களில் வசிக்கும் பெரும்பான்மை மக்கள் எண்ணிக்கைக்கு வேறுபட்ட சிறுபான்மை இனப்பிரிவினருக்கு, முன்னர் காணப்பட்ட வகையிலேயே பிரதிநிதித்துவத்திற்கான அவகாசம் செய்யப்பட வேண்டுமென்பது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த பெரும்பாலான தரப்பினரின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. உத்தேச மாகாண சபை தேர்தல் முறைமைக்கமைய தொகுதிகளின் கீழ் அதிகப்படியான வாக்கினால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக் கொள்ளும் வாக்குகளின் சதவீதத்தின் அடிப்படையில் தெரிவு செய்வதற்காக, அத்தகைய கட்சி/ குழுவினால் தயாரிக்கப்படுகின்ற வேட்பாளர் பெயர்ப்பட்டியல் மூலமாக தமது சிறுபான்மை பிரதிநிதிதவத்திற்கான வாய்ப்புக்களைப் பெறுதல் பற்றி தொடர்பில் அவ்வளவு தூரம் நம்பிக்கை வைப்பது கடினமானதென்பது அவர்களின் கருத்தாகக் காணப்பட்டது. எனவே, சிறுபான்மை மக்கள் பிரிவினரும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் விதத்திலான பிரதிநிதித்துவத் தொகுதிகளை உருவாக்குவது மிகவும் பொருத்தமென்பது, சிறுபான்மை மக்கள் பிரிவினரின் பிரதிநிதித்துவத்திற்குரிய விடயங்களைச் சமர்ப்பித்த அதிகமானவர்களின் கருத்தாகக் காணப்பட்டது. அதற்காக பொருத்தமான சந்தர்ப்பங்களில் பல் உறுப்பினர் பிரதிநிதித்துவ தொகுதிகளை உருவாக்குதல் தேவைப்பாடொன்றாக அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

(உ) நிருவாக மாவட்டங்களில் சனத் தொகை அடர்த்தி குறைந்த பிரதேசங்களில் தேர்தல் தொகுதிகளைத் தாபிக்கும் போது, அவற்றில் உள்ளடக்கும் நிலப்பரப்பின் விசாலத்தை விடவும் மக்கள் தொகையின் நடுநிலைத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்ளல் தொடர்பாக குழுவின் கவனத்தைச் செலுத்தினால், நிலப்பரப்பில் பெரிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதன் காரணமாக, தேர்தல் தொகுதியொன்றிட்கு இணைப்புச் செய்யப்படும் மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள கிராம அலுவலர்கள் பிரிவுகளின் எண்ணிக்கையில் சமநிலைத் தன்மையைப் பேனிக்கொள்வதற்கு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. இதனூடாக உரிய தேர்தல் தொகுதியில் மக்கள் பிரதிநிதிகள் போன்றே வாக்காளர்களுக்கும் வசதியாக அமையுமென, அத்தகைய பிரேரணைகளைச் சமர்ப்பித்த தரப்பினரின் கருத்தாகக் காணப்பட்டது.

(ஊ) மாகாண சபைகளுக்காக நிருவாக மாவட்டமொன்றினுள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக தாபிக்கப்படவுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க வேண்டுமெனவும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த முன்மொழிவுகளை சமர்ப்பித்திருந்த தரப்பினர்கள் கொண்டிருந்த இரண்டு கருத்துக்கள் காரணமாக அவ்வாறு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை குழுவுக்கு தெரிய வந்தது. அதில் முதலாவது, நிருவாக மாவட்டத்தின் நில வேறுபாட்டு அம்சங்கள், சனத்தொகை உள்ளடக்கம், மற்றும் சனத்தொகை பரம்பல், மாவட்டத்தில் நிலத்தின் விஸ்தீரனம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் தொகைக்கு நியாயமான பிரதிநிதித்துவமொன்றுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் ஒரு எதிர்பார்ப்பாகும். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரப் பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்தல் காரணமாக அவற்றின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்தமையால், மற்றும் அதற்குச் சமமான வகையில் மாகாண சபைகளுக்காக நிருவாக மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் அதிகரிப்பதற்காக, அவர்கள்

தெரிவு செய்யப்படுகின்ற தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்பது அவரகளின் கருத்தாகக் காணப்பட்டது.

(எ). நிருவாக மாவட்டமொன்றில் வசிக்கின்ற இனப்பிரிவொன்று பிரதிநிதிதத்துவம் செய்யப்படுவதை நோக்காகக் கொண்டு தேர்தல் தொகுதிகளை வேறு பிரிக்கும் போது , இலங்கையில் மக்களிடையே, இனப்பரிவின் படி சிந்திப்பதற்கு மற்றும் கடமையாற்றுவதற்கு உக்குவிப்பொன்று ஏற்படுமொன்பதால், தற்போது மாகாண சபைத் தேர்தல்களுக்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற விகிதாசார பிரதிநிதித்துவ முறையை தொடர்ந்தும் அவ்வாறே நடைமுறைப்படுத்துவது பொருத்தமானதென்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கு அதிக விருப்பம் தெரிவிப்பதாகவும், விகிதாசார பிரதிநிதித்துவ முறை , தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறையை விடவும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையுமெனவும் அத்தகைய தரப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

(ஏ) உத்தேச மாகாண சபை கலப்பு பிரதிநிதித்துவ முறையின் கீழ், நிருவாக மாவட்டங்களை தேர்தல் தொகுதிகளாகப் பிரிவிடல் தொடர்பாக பிரேரணைகளை முன்வைப்பதற்கு உரிய தரப்பினருக்கு போதிய காலம் குழுவினால் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக குறித்த தரப்பினர்களை அறிவூட்டுவதற்கு, இந்தக் குழுவினால் மேற் கொண்ட நடவடிக்கைகள் இந்த அறிக்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உரிய தரப்பினர்கள் எழுத்து மூலமும் மற்றும் வாய்மொழி மூலமும் செய்யப்பட்ட விடயங்கள் முனவைப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயம் யாதெனில், புதிய பிரதிநிதித்துவ முறை தொடர்பாக சில தரப்பினர்களுக்கு போதியளவு தெளிவான புரிந்துணர்வொன்று காணப்படவில்லையென்பதாகும். அவ்வாறே குறித்த முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்காக வருகைதந்திருந்த சிலர் அது தொடர்பாக உரிய தயார் நிலையில் விடயங்கள் முன்வைப்பதற்காக வருகை தரவில்லையென்பது, குழுவினால் அவதானிக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

### 2.2.7 சுருக்கக் குறிப்பு

2017.12.31 ஆம் திகதியாகும் போது மாகாண சபை எல்லை நிர்ணய குழுவினால் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டு தேர்தல் தொகுதிகள் பிரிவிடல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் குழு தனது பொறுப்புக்களை நிறைவேறயியது. குழுவின் உறுப்பினர்களால் 2018.02.19 ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சருக்கு அறிக்கை கையளிக்கப்பட்டது.

## 2.3 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்ட அடிப்படைகள்

ஆண்டினுள் எதிர்பார்க்கப்பட்ட யாப்புத் திருத்தம் இடம்பெறவில்லை. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தைத் தயாரிக்கும் போது பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. பொதுத் திறைசேரியினால் கோரப்பட்டதற்கமைய 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கல் திட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் உள்ளடக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

1) உரிய தகவல்களை சேகரித்தல் ( நிர்வாக அலகு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களைத் தாபித்தல் தொடர்பான சகல வர்த்தமானி அறிவித்தல்களை சேகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2) இலங்கையில் சனத்தொகை மற்றும் காணி முதன்மை விசாரனைகளின் போது பயன்படுத்தக் கூடிய விஸ்தரித்த பகுப்பாய்வுடன் கூடிய முன்னைய எல்லை நிர்ணய அறிக்கைகள்

3) 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணய சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களை ஆராய்ச்சி செய்தல்.

# 3. நிருவாகம்

## 3.1. கூட்டங்கள்

### 3.1.1 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்

2017.01.01 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| கூட்ட முறை | திகதி | கூட்ட முறை | திகதி |
|---|---|---|---|
| 16 ஆம் கூட்டம் - | 2017.01.20 | 21 ஆம் கூட்டம் - | 2017.07.04 |
| 17 ஆம் கூட்டம் - | 2017.03.06 | 22 ஆம் கூட்டம் - | 2017.07.17 |
| 18 ஆம் கூட்டம் - | 2017.03.29 | 23 ஆம் கூட்டம் - | 2017.08.21 |
| 19 ஆம் கூட்டம் - | 2017.04.25 | 24 ஆம் கூட்டம் - | 2017.09.21 |
| 20 ஆம் கூட்டம் - | 2017.06.28 | 25 ஆம் கூட்டம் - | 2017.10.09 |

### 3.1.2 மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணய குழுக் கூட்டங்கள்

2017.10.04 திகதி நியமிக்கப்பட்ட மாகாண சபை எல்லை நிர்ணய குழுவினால் 2017.10.04 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் 13 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| கூட்ட முறை | திகதி | கூட்ட முறை | திகதி |
|---|---|---|---|
| 1 ஆம் கூட்டம் - | 2017.10.09 | 8 ஆம் கூட்டம் - | 2017.12.16 |
| 2 ஆம் கூட்டம் - | 2017.10.16 | 9 ஆம் கூட்டம் - | 2017.12.17 |
| 3 ஆம் கூட்டம் - | 2017.11.01 | 10 ஆம் கூட்டம் - | 2017.12.20 |
| 4 ஆம் கூட்டம் - | 2017.11.06 | 11 ஆம் கூட்டம் - | 2017.12.22 |
| 5 ஆம் கூட்டம் - | 2017.11.17 | 12 ஆம் கூட்டம் - | 2017.12.28 |
| 6 ஆம் கூட்டம் - | 2017.11.23 | 13 ஆம் கூட்டம் - | 2017.12.29 |
| 7 ஆம் கூட்டம் - | 2017.12.07 | | |

### 3.1.3 பொது மக்கள் கருத்துக்களைக் கேட்டறியும் மாவட்டக் கூட்டங்கள்

2017.10.04 ஆம் திகதி நியமிக்கப்பட்ட மாகாண சபை எல்லை நிர்ணய குழு 2017.10.04 ஆம் திகதி தொடக்கம் 2017.12.31 வரையான காலப்பகுதியினுள் பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறிவதற்கான மாவட்ட மட்டத்திலான 25 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

| கூட்டம் முறை | திகதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|
| 1 ஆம் கூட்டம் | 2017.11.09 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - அநுராதபுரம் |
| 2 ஆம் கூட்டம் | 2017.11.09 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - திருக்கோணமலை |
| 3 ஆம் கூட்டம் | 2017.11.10 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - பொலன்னறுவை |
| 4 ஆம் கூட்டம் | 2017.11.10 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - மட்டக்களப்பு |
| 5 ஆம் கூட்டம் | 2017.11.11 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - அம்பாறை |
| 6 ஆம் கூட்டம் | 2017.11.15 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - கேகாலை |
| 7 ஆம் கூட்டம் | 2017.11.15 பி.ப. 2.30 - 6.00 மணி | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - இரத்தினபுரி |
| 8 ஆம் கூட்டம் | 2017.11.20 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - குருணாகல் |
| 9 ஆம் கூட்டம் | 2017.11.20 பி.ப. 2.30 - 6.00 மணி | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - புத்தளம் |
| 10 ஆம் கூட்டம் | 2017.11.22 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - மாத்தளை |
| 11 ஆம் கூட்டம் | 2017.11.22 பி.ப. 2.30 - 6.00 மணி | மாவட்டச் செயலாளர் அலுவலகம்- கண்டி |
| 12 ஆம் கூட்டம் | 2017.11.23 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - நுவரெலியா |
| 13 ஆம் கூட்டம் | 2017.11.23 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - பதுளை |
| 14 ஆம் கூட்டம் | 2017.11.24 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - மொணராகலை |
| 15 ஆம் கூட்டம் | 2017.11.27 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - வவுனியா |
| 16 ஆம் கூட்டம் | 2017.11.28 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம் |
| 17 ஆம் கூட்டம் | 2017.11.28 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - கிளிநொச்சி |
| 18 ஆம் கூட்டம் | 2017.11.29 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - முல்லைத்தீவு |
| 19 ஆம் கூட்டம் | 2017.11.29 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம - மன்னார் |
| 20 ஆம் கூட்டம் | 2017.12.06 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - கொழும்பு |
| 21 ஆம் கூட்டம் | 2017.12.06 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - கம்பஹா |
| 22 ஆம் கூட்டம் | 2017.12.07 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - களுத்துறை |
| 23 ஆம் கூட்டம் | 2017.12.07 பி.ப. 2.30 - 6.00 மணி வரை மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - காலி |
| 24 ஆம் கூட்டம் | 2017.12.08 மு.ப 8.30 - 12.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - மாத்தறை |
| 25 ஆம் கூட்டம் | 2017.12.08 பி.ப. 2.30 - 6.00 மணி வரை | மாவட்டச் செயலாளர் அலுவலகம் - அம்பாந்தோட்டை |

## 3.2 அலுவலக இடவசதி, தளபாடப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து

### 3.2.1 அலுவலக இடவசதி

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் எல்லை நிர்ணய ஆணைக்குழு அலுவலகத்தை நிலஅளவைத் திணைக்களத்தில் வாடகையின்றி பேணிச்செல்வதற்கு நிள அளவையாளர் நாயகம் அவர்களால் இடமளிக்கப்பட்டது. 790 சதுர அடி

அளவுடைய இடம் கிடைக்கப்பெற்றதுடன் அது 03 அறைகளாக வேறுபிரிக்கப்பட்டது. இடவசதிக்கு மேலதிகமாக மின்சாரம், நீர், மலசல கூட வசதிகள், வாகனத் தரிப்பிடம் உள்ளிட்ட சகல வசதிகளும் நில அளவையாளர் நாயகம் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டன.

**தற்போதைய அலுவலக முகவரி**

எல்லை நிர்ணய ஆணைக்குழு
நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடம்
அஞ்சல் பெட்டி இல. 506
கொழும்பு - 05

**3.2.2 தளபாடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் - இணைப்பு 2 ஐப் பார்க்கவும்**

**3.2.3. போக்குவரத்து நடவடிக்கைகள்**

பொதுத் திறைசேரியினால் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு 2016 ஆம் ஆண்டில் CAP – 7180 மற்றும் CAR- 0347 ஆம் இலக்க 2 வாகனங்கள் வழங்கப்பட்டன. இவை ஜனாதிபதியின் செயலாளர் அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**3.2.4 எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நியமனங்கள்**

எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படும் பணிப் பொறுப்புக்களைக் கருத்திற் கொண்டு முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் அவர்களால் அவருடைய 2016.02.05 ஆம் திகதிய DMS/1029 ஆம் இலக்க கடிதம் மூலம் கீழ்வரும் நியமனங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

| **பதவி** | **மட்டம்** | **பதவிகளின் எண்ணிக்கை** | **சம்பளக் குறியீடு** |
|---|---|---|---|
| செயலாளர் | சிரேட்ட | 01 | SL-3-2006 |
| கணக்காளர் | சிரேட்ட | 01 | SL-1-2006 |
| இணைப்புச் செயலாளர் | மூன்றாம் நிலை | 01 | பெ. நி. சுற்றறிக்கெ 06/2006 |
| நிருவாக அலுவலர் | மூன்றாம் நிலை | 01 | MN-7-2006 |
| மொழி பெயர்ப்பாளர் | இரண்டாம் நிலை | 03 | MN-6-2006 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MT-1-2006 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | இரண்டாம் நிலை | 02 | MN-2-2006 |
| சாரதி | ஆரம்ப | 02 | PL-3-2006 |
| அலுவலகப் பணியாளர் | ஆரம்ப | 02 | PL-1-2006 |
| மொத்தம் | | 15 | |

ஆண்டில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளஅலுவலர் நியமனங்கள் செய்யப்பட்டன.

(அ) அலுவலகப் பணியாளர் திரு. ஆர். எம். ஆர். எரந்த அவர்கள் 2017.01.02 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் DC/ AD/ 03/ KKS ஆம் இலக்க மற்றும் 2016.12.26 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஆ) அலுவலகப் பணியாளர் திருமதி. டப்ளிவ். ஏ. டீ. விக்கிரமாரச்சி அவர்கள் 2017.01.02 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் DC/ AD/ 03/

KKS ஆம் இலக்க மற்றும் 2016.12.26 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(இ) சாரதி திரு. ஏ. எச். டீ. டீ. த சில்வா அவர்கள் 2017.01.19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் DC/ AD/ 03/ DR மற்றும் 2017.01.10 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஈ) சாரதி திரு டீ. ஜீ. கெலும் அவர்கள் 2017.02.15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் DC/ AD/ 03/ DR மற்றும் 2017.02.09 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(உ) நிருவாக உத்தியோகத்தர் திரு. எச். டி. ஜயசிறி அவர்கள் முகாமைத்துவ சேவைகள் அமைச்சின் PA/ MAS/ SU/ 36362 ( C ) மற்றும் 2017.03.16 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(ஈ) செயலாளர் (பகுதி நேரம் ) - திரு. சமன் சிறி ரத்நாயக்க, அவர்கள் மேலதிகத் தேர்தல் ஆணையாளர் 2017.03.21 ஆம் திகதி தொடக்கம் 2018.03.20 வரை DC/ AD/ 03/ STAFF ஆம் இலக்க மற்றும் 2017.03.21 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(உ) கணக்காளர் (பகுதி நேரம் ) - எச். டப்ளிவ். என். குமார, அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கணக்காளர் 2017.04.01 ஆம் திகதி தொடக்கம் 2018.03.31 வரை ஒரு வருட காலத்திற்கு DC/ AD/ 03/ STAFF ஆம் இலக்க மற்றும் 2017.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கமைய 2017.12.31 ஆம் திகதிக்குப் பணியில் ஈடுபட்டுள்ளளோர் விபரம் பின்வருமாறு.

| பதவி | அனுமதிக்கப்பட்ட | நிரப்பப்பட்ட | வெறற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 [ய] | - |
| கணக்காளர் | 01 | 01 [ய] | - |
| இணைப்புச் செயலாளர் | 01 | 01 | - |
| நிருவாக அலுவலர் | 01 | 01 | - |
| மொழி பெயர்ப்பாளர் | 03 | 0 | 03 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 0 | 02 |
| அரச முகாமைத்துவ எதவியாளர் | 02 | 02 | - |
| சாரதி | 02 | 02 | - |
| அலுவலகப் பணியாளர் | 02 | 02 | - |
| மொத்தம் | 15 | 10 | 05 |

a- பகுதி நேரம்

### 3.3 காலாண்டு செயலாற்றுகை அறிக்கை

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் 2017ஆம் ஆண்டு ஜனவரி - மார்ச் மற்றும் ஏப்ரல் - யூன் மாதங்களுக்காக காலண்டு மூன்றுமாத மாதாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அரசியல் அமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அனைத்து அறிக்கைனளும் மும்மொழிகளிலும் தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டன. மூன்றாம் மற்றும் நான்காம் மும்மாத அறிக்கைகள் முறையே 2018 பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் அரசியல் அமைப்புப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இங்கு தாமதமொன்று ஏற்படக் காரணம் ஒக்தோபர்- திசெம்பர் மாதங்களில் மாகாண சபை எல்லை நிர்ணய குழுவின் கடமைகள் அதிகரித்துக் காணப்பட்டமையாகும்.

## 4. நிதி அலுவல்கள்

### 4.1 வரவு வெலவுத் திட்டம்

2017 ஆம் வருடத்திற்காக 15.25 மில்லியன் ரூபாவுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு ( மீண்டெழும் செலவுகள் 14.5 மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவுகள் 1.2 மில்லியன் ரூபா) செலவு விடயம் 25இன் கீழ் பொது திறைசேறிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

பொது திறைசேறியினால் 11.63 மில்லியன் ரூபா (மீண்டெழும் செலவுகள் 10.43 மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவுகள் 1.2) அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக மீண்டெழும் செலவுகளுக்காக நி.ஒ. விதி 66 இன் கீழ் 5 சந்தர்ப்பங்களிலும் ஒரு சந்தர்ப்பத்தில் மூலதனச் செலவுகளுக்காகவும் நிதி பெற்றுக் கொள்ளப்பட்டது. மாகாண சபைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்வதற்கு சனதிபதி அவர்களால் 2017.10.04 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்ட பின்னர் அதன் அலுவல்களுக்காக பொதுத் தறைசேறியிடம் நிதி கோரப்பட்டது. அதற்காக 21.21மில்லியன் ரூபா நிதி அனுமதிக்கப்பட்டது.

### 4.2 உண்மைச் செலவுகள்

2017 ஆம் ஆண்டில் உண்மைச் செலவுகள் 19.4 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதோடு, மீண்டெழும் செலவுகள் 18.97 மில்லியன் ரூபாவும் மற்றும் மூலதனச் செலவுகள். 0.67 மில்லியன் ரூபாவும் செலவு செய்யப்பட்டன..

| செலவு விடயமட | விபரம் | ஒதுக்கீடு ரூபா (000) | மாற்றல் நி.ஒ.விதி 66 ரூபா (000) | குறை நிரப்பு ரூபா .(000) | மொத் ஒதுக்கீடு ரூபா (000) | செலவுகள் ரூபா (000) . | நிதி செயலாற்றுகை % |
|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் | | | | | | | |
| 1001-1003 | ஆடகள் சம்பளம் | 7,780 | -436 | 9,884 | 17,228 | 10,988 | 64 |
| 1101-1102 | பிரயானச் செலவுகள் | 160 | -80 | 300 | 380 | 29 | 8 |
| 1201-1203 | வழங்கல் | 1,050 | 436 | 1,880 | 3,366 | 1,909 | 57 |
| 1301-1303 | பராமரிப்பு | 202 | | | 202 | 170 | 84 |
| 1401-1409 | சேவைகள் | 1,215 | 80 | 9,150 | 10,445 | 5,866 | 56 |
| 1506 | மாற்றம் செய்தல் | 20 | | | 20 | 0 | 0 |
| **மொத்தம்** | | **10,427** | **0** | **21,214** | **31,641** | **18,961** | **60** |
| மூலதன | | | | | | | |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 100 | | - | 100 | 99 | 99 |
| 2103 | இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் | 750 | 250 | - | 1000 | 542 | 54 |
| 2106 | மென் பொருள் விருத்தி | 250 | -250 | | 0 | | |
| 2401 | பயிந்சி மற்றும் நடத்தை விருத்தி | 100 | | - | 100 | 33 | 33 |
| **மொத்தம்** | | **1,200** | **0** | **-** | **1200** | **674** | **56** |
| **முழு மொத்தம்** | | **11,627** | | **21,214** | **32,841** | **19,635** | **60** |

முற்பணக் கணக்கு அலுவல்கள்

| விபரம் | உயர்ந்த பட்ச செலவு ரூபா (000) | குறைந்த பட்ச செலவு ரூபா (000) | வரவு மீதியின் உயர்ந்த பட்ச எல்லை ரூபா (000) |
|---|---|---|---|
| ஒதுக்கீடு | 1,500 | 400 | 4,000 |
| உண்மை | 850 | 59 | 59 |

### 4.3 கணக்காய்வாளர் நாயகத்தில் குறித்துரைகள் - இணைப்பு 5 ஐப் பார்க்கவும

## 5. நன்றி நவிலல்

1. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு எலல்லா சந்தர்ப்பங்களிலும் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கிய அரசியலமைப்புச் பேரவையின் தவிசாளர் உள்ளிட்ட அதன் அங்கத்தவர்கள் அனைவருக்கும்,
2. எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு நிரந்தர அலுவலக இடவசதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கிய நில அளவையாளர் நாயகத்திற்கும், அவரின் பணியாட் குழுவினருக்கும்,
3. அலுவலர்களை விடுவித்தல், பணிக்குழுவினரை பயிற்றுவித்தல் போன்ற பல்வேறு வசதிகளை வழங்கிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களுக்கும் தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிக் குழுவினருக்கும்,
4. தேவையான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வாகனம் போன்றவற்றை வழஙகிய சனாதிபதி அலுவலகம் மற்றும் திறைசேரிக்கும்.
5. ஒன்பது மாகாணங்களில் 25 மாவட்டங்களில் தேர்தல் தொகுதிகளை வேறு பிரிப்பதற்கு மற்றும் அது தொடர்பான அறிக்கையை 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்)சட்டத்திற்கு அமைய 4 மாதங்கள் குறுகிய காலப்பகுதியினுள் தயாரிப்பதற்கு மாகாண சபை எல்லை நிர்ணயக் குழுவிற்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணைப்பு - 01

## 2017 வரவு செலவுத் திட்ட வரைவு

| செலவு விடயம் | நிதியீட்டம் | விபரம் | 2017 மதிப்பீடு |
|---|---|---|---|
| | | **மீண்டெழும் செலவுகள்** | **14,049,516** |
| | | **ஆட்களுக்கான சம்பளங்கள்** | **10,292,516** |
| 1001 | 11 | சம்பளம் மற்றும் வேதனங்கள் | 4,565,172 |
| 1001 | 21 | சம்பளம் மற்றும் வேதனங்கள் | 3,000,000 |
| 1002 | | மேலதிக வேலை நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் | 80,000 |
| 1003 | | வேறு படிகள் | 2,647,344 |
| | | **வேறு மீண்டெழும் செலவுகள்** | **3,757,000** |
| | | **பயணச் செலவுகள்** | **175,000** |
| 1101 | | உள்நாட்டு | 75,000 |
| 1102 | | வெளிநாட்டு | 100,000 |
| | | **வழங்கல் செலவுகள்** | **1,792,000** |
| 1201 | | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 100,000 |
| 1202 | | எரிபொருட்கள் | 1,500,000 |
| 1203 | | உணவு மற்றும் சீருடை | 192,000 |
| | | **பராமரிப்புச் செலவுகள்** | **275,000** |
| 1301 | | வாகனங்கள் | 200,000 |
| 1302 | | இயந்திரங்கள் மற்றும் உபகரணம் | 50,000 |
| 1303 | | கட்டிடங்கள் மற்றும் நிருமானங்கள் | 25,000 |
| | | **சேவைகள்** | **1,495,000** |
| 1401 | | போக்குவரத்து | 600,000 |
| 1402 | | அஞ்சல் மற்றும் தொடர்பாடல் | 700,000 |
| 1403 | | மின்சாரம் மற்றும் நீர் | 180,000 |
| 1404 | | வாடகை மற்றும் உள்நாட்டு வரி | |
| 1405 | | வேறு | 15,000 |
| | | **மாற்றல்கள்** | **20,000** |
| 1506 | | அரச அலுவலர்களுக்கான ஆதனக் கடன் | 20,000 |
| | | வேறு மீண்டெழும் செலவுகள் | - |
| | | **மூலதனச் செலவுகள்** | **1,200,000** |
| | | மூலதனச் சொத்துக்கள் விருத்தி மற்றும் மறுசீரமைப்பு | |
| 2001 | | கட்டிடங்கள் மறற்றும் நிருமானம் | |
| | | **மூலதனச் சொத்துக்களை கையேற்றல்** | **1,100,000** |
| 2101 | | வாகனங்கள | |
| 2102 | | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணம் | 100,000 |
| 2103 | | இயந்திரம் மற்றும் உபகரணம் | 750,000 |
| 2104 | | கட்டிட நிருமானம் | |
| 2106 | | மென் பொருள் விருத்தி | 250,000 |
| | | **திறன் விருத்தி** | **100,000** |
| 2401 | | பணியாட்குழு பயிற்சிகள் | 100,000 |
| | | **வேறு மூலதனச் செலவுகள** | |
| 2505 | | எதிர்பார்க்கப்பட்ட பெறுகை | |
| **மொத்தச் செலவுகள்** | | | **15,249,516** |
| | | | |
| **மொத்த நிதியீட்டம்** | | | **15,249,516** |
| | | **உள்நாட்டு** | **15,249,516** |
| | | 11 உள்நாட்டு நிதியம் | 12,249,516 |
| | | 21 வெளிநாட்டுக் கடன் | 3,000,000 |

இணைப்பு - 2

**2017.12.31 ஆம் திகதிக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்**

| விடயம்/பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| கணினி – உதிரிப் பாகங்கள் சகிதம் | 03 |
| மடிக்கணினி (Laptop) | 04 |
| யூ பீ எஸ் (UPS) | 03 |
| அச்சிடல் பொறி ( printer) | 01 |
| புகைப்படப் பிரதி இயந்திரம் | 01 |
| தொலைநகல் இயந்திரம் | 01 |
| நிலையான தொலைபேசி | 03 |
| ரவுட்டர் (Router) | 01 |
| இரும்பு அலுமாரி (லாச்சுக் கொண்டது) | 04 |
| புத்தக இராகக்கை | 01 |
| இரும்பு இராக்கை | 01 |
| நிறைவேற்று அலுவலர் கதிரை | 03 |
| நிறைவேற்று அலுவலர் கதிரை ( குசன் சகிதம்) | 04 |
| கணினி மேசைக்கான கதிரை | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் கதிரை | 02 |
| வரவேற்பு மண்ட கதிரை | 06 |
| பிளாஸ்டிக் கதிரை | 05 |
| நிறைவேற்று அலுவலர் மேசை ( பெரிய) | 03 |
| நிறைவேற்று அலுவலர் மேசை ( சாதாரனம்) | 04 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் மேசை | 02 |
| கணினி மேசை | 02 |
| எழுதுநர் மேசை | 02 |
| தரவு சேமிப்பு உபகரணம் (External Hard) | 01 |
| கணிப்பான் | 12 |
| துளையிடு கருவி (02 துளை) (பன்சர்) | 15 |
| துளையிடு கருவி (04 துளை) (பன்சர்) | 01 |
| பிணிக்கை (ஸ்டெப்லர்) சிறிய | 08 |
| பிணிக்கை (ஸ்டெப்லர்) பெரிய | 01 |
| மின்சாரக் கேத்தல் | 01 |

## இணைப்பு - 3

### உத்தேச எல்லை நிருணய ஆணைக்குழுச் சட்டம் - கொள்கை விளக்கம்

**1. அறிமுகம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தத்திற்கு அமைய 2015 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி 41 ஆ மற்றும் 95(1) உறுப்புரைகளுக்கு அமைவாக மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட எல்லை நிருணய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்பட்டது. அவ்வாணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் தத்துவங்கள் தற்போதைய அரசியலமைப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை.

ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது தொடக்கம் அதன் உறுப்பினர்கள் எல்லை நிருணயம் தொடர்பான பூகோள அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள ஆவணங்களைச் சேகரித்து ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்களை ஆற்றுவதற்குத் தயாராவதற்காக முன்னர் காணப்பட்ட எல்லை நிருணய ஆணைக்குழுக்களின் வரலாறு மற்றும் அவ்வாணைக்குழுக்கள் தாபிக்கப்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்ப்பதில் ஈடுபட்டனர். இந்த ஆராய்ச்சியின் போது ஒவ்வொரு காலப்பகுதிகளில் தேர்தல்கள் மாவட்டங்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் பொது நிருவாக மாவட்டங்கள் என்பவற்றின் எல்லைகளை நிருணயம் செய்யும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற வெவ்வேறு நிறுவனங்களுக்கு அவ்வப்போது கையளிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இவ்வாறு கண்டறியப்பட்ட தகவல்களுக்கு அமைய எல்லை நிருணய விடயம் தொடர்பான கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு முக்கியமான பல விடயங்கள் தொடர்பான அவதானிப்புக்களையும் மற்றும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ள முடியுமென ஆணைக்குழு புரிந்து கொண்டது. இந்த ஆவணம் அந்த நோக்கத்தைக் அடிப்படையாகக் கொண்டே சமர்ப்பிக்கப்படுகின்றது. இந்தப் பத்திரத்தில் ஆரம்பமாக தற்போது காணப்படும் நிலைமைகள் மற்றும் இதற்கு முன்னர் காணப்பட்ட எல்லைகளை நிருணயம் செய்தலின் போது பின்பற்றப்பட்ட கொள்கைகள் என்பவற்றை அறிமுகம் செய்வதாகும். அதன் பின்னர் எதிர்காலத்தில் எல்லைகளை நிருணயம் செய்தலின் போது தாக்கம் செலுத்தக் கூடிய விரிவான அடிப்படைகளுடன் கூடிய மொத்தச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய கொள்கையொன்றின் தேவைப்பாடு தொடர்பாக ஆணைக்குழு கொண்டுள்ள கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இறுதியாக இவற்றை ஆற்றிக் கொள்ளக் கூடிய விதம் தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பித்து இதனை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கக்கூடிய பயன்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**2. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான எல்லை நிருணயம் தொடர்பான வரலாறு.**

சோல்பரி யாப்புத் தொடக்கம் 6 எல்லை நிருணய ஆணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. 1946 ஆம் ஆண்டில் முதலாவது எல்லை நிருணய ஆணைக்குழு அதன் பணிப்பொறுப்புக்களை நிறைவு செய்வதற்கு முன்னர் இடையில் நிறுத்தப்பட்டது. 1953 ஆம் ஆண்டில் எல்லை நிருணய ஆணைக்குழுவொன்று செயற்பட்டது. 1959, 1976, 1981 ஆம் ஆண்டுகளிலும் எல்லை நிருணய ஆணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டதோடு, 1998 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட எல்லை நிருணய ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த எல்லை நிருணய ஆணைக்குழுக்கள் பாராளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்கெடுப்பு மாவட்டங்களின் எல்லைகளை மீள வரையறை செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்காக நியமனம் செய்யப்பட்டவைகளாகும். இவ்வாணைக்குழுக்கள் அரசியல் யாப்பு மற்றும் அவற்றில் செய்யப்பட்ட திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பல கோட்பாடுகளினால் வழிநடாத்தப்பட்டன. உரிய பணிப்பொறுப்புக்கள் ஆற்றப்பட்ட பின்னர் இவ்வாணைக்குழுக்களின் காலம் முடிவுறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக

இதர தேர்தல்கள் மற்றும் நிருவாக மட்டங்களுக்குத் தேவையான எல்லைகளை வரையறை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களும் மற்றும் பல திட்டங்களும் இலங்கையில் காணப்படுகின்றன.

## 3. எல்லை நிருணயம் தொடர்பான தற்போதைய நிலைமை தற்போது பின்பற்றப்படுகின்ற கொள்கைகள்

இது வரை இலங்கையின் எல்லை நிருணயம் தொடர்பான அலுவல்கள் அரசியல் அமைப்பு மற்றும் அதன் திருத்தங்கள் ஊடாக பல்வேறு மட்டங்களில் தேர்தல்கள் எல்லை நிருணயம் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் அதில் சேர்க்கப்பட்ட திருங்கள் என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் கடந்த காலத்தில் பல்வேறு காலகட்டங்களில் பாராளுமன்றத் தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் உள்ளூராட்சி சபை அதிகாரப் பிரதேசங்கள் மற்றும் நிருவாகப் பிரதேசங்கள் என்பவற்றை நிருணயம் செய்வதற்காகப் பல்வேறு குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன. கடந்த காலத்திலிருந்து பாடம் கற்க வேண்டுமென்பதால் இந்நாட்டின் பல்வேறு மட்டங்களில் எல்லை நிருணயம் மேற்கொள்ளப்பட்ட விதம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது காலோசிதமானது.

### 3.1. உள்ளூராட்சி சபை அதிகாரப் பிரதேசங்களின் வட்டார எல்லை வரையறை

உள்ளூராட்சி சபை தேர்தல்களின் போது அனைத்து மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பனவற்றின் அதிகாரப் பிரதேசம் வாக்கெடுப்பு பிரிவாகும். 2012 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய விகிதார முறைமையின் கீழ் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. அத்தேர்தல்களை நடாத்தும் பொறுப்பு அன்று தேர்தல்கள் ஆணையாளரின் பொறுப்பாகும். இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டு வரை மீள நிருணயம் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை. அதன் காரணமாக உள்ளூர் அதிகார சபைகளுக்கான வட்டார எல்லை நிருணயக் குழுவொன்று 2012 ஆம் ஆண்டு வரை நியமனம் செய்யப்படவில்லை.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்திற்கமைய உள்ளூர் அதிகார சபைகளுக்காக தனி அங்கத்தவர் தேர்தல் முறைமை மற்றும் கலப்பு முறைமை என்பன அறிமுகம் செய்யப்பட்டது. இது தொடர்பில் செயற்படுவதற்காக 2012 ஆம் ஆண்டில் ஐவர் கொண்ட தேசிய எல்லை நிருணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபை அதிகார பிரதேசங்களுக்காக சட்டத்தில் காட்டப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக வட்டாரங்களை வேறு பிரிக்க வேண்டியது எவ்வாறு என்பது தொடர்பாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்குப் பரிந்துரை வழங்கும் பணிப்பொறுப்புக் இதற்குக் கையளிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதிமேதகு சனாதிபதி அவர்களால் எல்லை நிருணய ஆணைக்குழுவின் அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பான தேசிய எல்லை நிருணய ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எல்லை நிருணய மீளாய்வுக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. எல்லை நிருணய மீளாய்வுக் குழுவின் எல்லை நிருணயச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் 2017.02.17 ஆம் திகதி அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. எல்லை நிருணயக் குழு (ஆணைக்குழுவொன்றல்ல) நியமனம் செய்வதற்கும், புதிதாக உள்ளூராட்சி சபைகளை தாபிப்பதற்கும், ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், உள்ளூராட்சி சபைகளை தரமுயர்த்துவதற்கும், தற்போதுள்ள உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மீளாய்வு செய்வதற்கும், உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மாற்றம் செய்தல் அல்லது மீள விளக்குவதற்கும் தேவையான அனுமதியை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பு தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்டசி விடயப் பொறுப்பு அமைச்சருக்குரியதாகும்.

### 3.2. மாகாண சபைத் தேர்தல் மாவட்ட எல்லை வரையறை.

ஒரு மாகாணத்திற்காகத் தாபிக்கப்பட்டுள்ள மாகாண சபையொன்றுக்கு உட்படுகின்ற ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அமைவாக தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மாணிக்கப்படல் வேண்டும். அப்பணி விகிதாசார பிரதிநிதித்துவ முறைமைக்கமைவாக மேற்கொள்ளப்படுவதால் ஒவ்வொரு நிருவாக மாவட்டமும் தேர்தல் மாவட்டமொன்றாக கொள்ளப்படுவதாலும் அத்தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளை மீள வரையறை செய்யும் தேவைப்பாடொன்று ஏற்படவில்லை. இதன் காரணமாக மாகாண சபைகளின் தேர்தல் மாவட்ட எல்லைகளை நிருணயம் செய்வதற்கான எல்லை நிருணய ஆணைக்குழுவொன்று நியமனம் செய்வதற்குத் தேவைப்படவில்லை.

### 3.3. மாகாண சபை நிருவாக மாவட்ட எல்லை:

மாகாணங்கள் மற்றும் நிருவாக மாவட்டங்களின் எல்லைகள் இலங்கைக் குடியரசின் அரசியல் யாப்பில் மற்றும்/ அல்லது நிருவாக மாவட்டச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நிருவாக மாவட்டமொன்றின் அல்லது மாகாணமொன்றின் எல்லைகளை மாற்றம் செய்வதற்கு/ திருத்தம் செய்வதற்கு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் முன்மொழிவொன்று மற்றும்/ அல்லது அரசியலமைப்பு திருத்தமொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும். அவ்வாறு எல்லை மாற்றமொன்றைச் செய்வதற்கு அல்லது திருத்தமொன்றைச் செய்வதற்கு தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு எல்லை நிருணயக் குழுவொன்றை (ஆணைக்குழுவல்ல) நியமனம் செய்வதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் நடவடிக்கையெடுப்பார்.

### 3.4. பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகள் என்பனவற்றின் எல்லைகள்

புதிய பிரதேச செயலாளர் பிரிவுகளைத் தாபிப்பதற்கு எல்லை நிருணயக் குழுவொன்றை (ஆணைக்குழுவல்ல) நியமனம் செய்வதற்கும், ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளை வரத்தமாணியில் வெளியிடுவதற்கும, புதிய கிராம அலுவலர் பிரிவுகளை தாபிப்பதற்கு அல்லது தற்போதுள்ள கிராம அலுவலர் பிரிவுகளை மாற்றம் செய்வதற்குத் தேவைப்படுமிடத்து அதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தயாரித்து சமர்ப்பித்து அதற்குரிய பணிகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கே கையளிக்கப்பட்டுள்ளது.

### 3.5. அரச வேைகளுக்காக எல்லை நிருணயம்.

தேர்தல்கள் மற்றும் நிருவாக எல்லைகள் தவிர வேறு அரச சேவைகளான (கமத்தொழில், கல்வி, சுகாதாரம், வனப்பாதுகாப்பு, நீர்ப்பாசன, நிதிமன்ற, பொலிஸ்) போன்ற சேவைகளுக்காக மக்கள் (பிரசைகள்) மற்றும் காணி (சூழல்) தேவைகளுக்காக எல்லைகளை நிருணயம் செய்தல் பணிகள் தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கு அப்பால் சுயாதீனமாக குறித்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன்.

### 3.6 மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள்

தற்போது பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்கள் 160 காணப்படுவதோடு 336 உள்ளூர் அதிகார சபைகள் காணப்படுகின்றன. 25 மாவட்டங்களினுள் 331 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒன்றிணைக்கப்பட்ட 14,021 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. 340 சுகாதார மருத்துவ அலுவலர் பிரிவுகள், 311 கல்வி வலயங்கள், 439 பொலீஸ் பிரிவுகள் என்பன காணப்படுகின்றன. இவை அரச சேவைகளுக்கான பிரிவுகள்

சிலவாகும். இவற்றுள் சில எல்லைகள் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகள் என்பவற்றை மேவிச் செல்கின்றன. தேர்தல் நிருவாக எல்லைகள் மற்றும் அரச சேவைப் பிரதேச எல்லைகளுக்கிடையில் ஒத்ததன்மை, அதிகாரம் மற்றும் ஆட்புலப் பிரிவுகள் இல்லாமை காரணமாக அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் வேறு அரச கிளைகளின் அபிவிருத்தி அலுவல்களுக்கு மற்றும் அவற்றை ஒருங்கிணைப்புச் செய்வதற்கு பாதாகமான விதத்தில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் ஒரே வகையான நிருவாகப் பிரிவுகளுக்கிடையில் பாரிய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. உதாரணமாக மிகச் சிறிய நிருவாகப் பிரிவான 2 சதுர கிலோமீற்றர் நிலப்பகுதியினுள் அமையப் பெற்றுள்ள மட்டக்குளிய கிராம அலுவலர் பிரிவு 28,000 சனத்தொகையைக் கொண்டதோடு, 560 சதுர கிலோமீற்றர் கொண்ட பாணமை தெற்கு கிராம அலுவலர் பிரிவின் சனத்தொகை 1209 ஆகும். 100 நபர்களுக்குக் குறைந்த சனத்தொகை கொண்ட கிராம அலுவலர் பிரிவுகள் பலவும் காணப்படுகின்றன. (2012 வீட்டு மற்றும் சனத்தொகை கணக்கெடுப்பு)

பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அரச சேவைகளால் ஒரே நிருவாகப் பிரதேசம் வெவ்வேறு விதத்தில் பெயர் குறிக்கப்பட்டுள்ளமையால் மக்கள் மத்தியில் போன்றே நிருவாகிகள் மத்தியிலும் குழப்பநிலை தோன்றியுள்ளது. அரச திணைக்களங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் வேறு அரச நிறுவனங்கள் ஒத்ததன்மை கொண்ட நியதிகளைப் பின்பற்றாமை இதற்குக் காரணமாகும். உதாரணமாக அரச நிருவாக முறைமையின் கீழ் நிலப்பரப்பில் மாகாணத்திற்கு மாத்திரம் இரண்டாவதாக அமையும் 25 நிருவாக மாவட்டங்களில் தேர்தல் ஆணைக்குழு பெயர் குறிக்கும் 22 வாக்கெடுப்பு மாவட்டங்கள் காணப்படுகின்றன. இதில் சில வாக்கெடுப்பு மாவட்டங்களினுள் பல நிருவாகப் பிரிவுகளும் ஆயிரக்கணக்கான சதுர கிலோ மீற்றர் நிலப்பிரதேசமும் அடங்கும்.

தற்போதுள்ள முறைமையின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்களை எல்லை நிருணயம் செய்வதற்கும், உள்ளூர் அதிகார சபைகளின் எல்லைகளை நிருணயம் செய்வதற்கும், பொது நிருவாகப் பிரதேசம் மற்றும் அரச சேவைப் பிரதேச எல்லைகளை நிருணயம் செய்வதற்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதன் காரணமாக பல்வேறு மட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளுக்குத் தேவைப்படுகின்ற தகவல்களை தேடிக் கொள்வதிலும், பெற்றுக் கொள்வதிலும் அரச நிருவாகத்தின் போதும் மற்றும் அரச சேவை வழங்குவதிலும் குழப்பங்கள் மற்றும் வினைத்திறனின்மை என்பன காணப்படுவதாகத் தெரியவருகிறது.

## 4. தற்காலத்திற்கும் மற்றும் எதிர்காலத்திற்கும் தேவையான எல்லை நிருணயம் தொடர்பான கொள்கை

எல்லை நிருணயம் தொடர்பாக தற்போது பயன்படுத்தப்படுகின்ற கொள்கைகளை தேசிய தேவைப்பாடுகளுக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொள்ள வேண்டுமென்பது தெளிவான விடயமாகும். தேர்தல் மாவட்டங்கள் மற்றும் நிருவாகப் பிரதேசங்கள் என்பவற்றுக்குத் தேவையான எல்லை நிருணயப் பணிகள் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படுகின்ற, மறுசீரமைக்கப்படுகின்ற நிலையான ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட சட்டகமொன்றினுள் நடைமுறைப்படுத்தக் கூடிய சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நிலையான கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது தற்போதைய நிலைமையை ஆய்வு செய்யும் போது தெளிவாகின்றது. நாட்டின் சனத்தொகை உள்ளடக்கம் அடிக்கடி மாற்றமடைவதால் அனைத்து தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) ஏற்படுத்தல், ஒன்றிணைத்தல் மற்றும் தரமுயர்த்தல், என்பன செய்ய வேண்டிய தொடர் செயற்பாடொன்றாகும். புதிய உள்ளூர் அதிகார சபைகளுக்கான பல கொள்கைகள் ஏற்கனவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் குவிந்து

காணப்படுகின்றன. தற்போதைய முறைமை யாதெனில் அக்கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காகத் தனிநபர் அல்லது பலரைக் கொண்ட குழுவொன்றை ஒவ்வொரு நியமனம் செய்வதாகும்.

அவ்வாறான அனைத்து கோரிக்கைகளையும் ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமனம் செய்யப்படுமாயின் ஒத்ததன்மை கொண்ட சட்டகமொன்றினுள் ஒரு கோட்பாட்டு முறைமைக்கமைவாக சமநிலைத்தன்மை கொண்ட நியாயமான அளவுகோலொன்றை அதற்காக ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

தேர்தல் மாவட்ட எல்கைளை நிருணயம் செய்தல் தவிர்ந்த அரச நிருவாகம் மற்றும் அனைத்து அரச சேவைகள் (கமநல சேவை, கல்வி, வனப்பாதுகாப்பு, சுகாதாரம், நீர்ப்பாசன, நீதிமன்றம், பொலிஸ், போன்ற சேவைகள்) என்பவற்றுக்கு எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு மிக விரைவாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

5. பரிந்துரைகள் இப்பின்னணியின் கீழ் எல்லை நிருணய ஆணைக்குழு பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூர் அதிகார சபை என்பவற்றுக்குரிய அனைத்து எல்லை நிருணய அலுவல்களுக்காகவும் சட்டரீதியான அதிகார சபையாக பொது நிருவாக சேவை மற்றும் ஏனைய அரச சேவைகளுக்காக ஒத்ததன்மை கொண்ட ஒரு சட்டகம் மற்றும் கோட்பாட்டு முறைமை கொண்டதாக செயற்படுகின்ற ஒரே சமமான பூகோள எல்லைகளை வரையறை செய்யக்கூடிய ஒரு எல்லை நிருணய ஆணைக் குழுவொன்றை தாபிப்பது பொருத்தமென முன்மொழியப்படுகின்றது.

எல்லை நிருணயம் தொடர்பான கட்டமைப்பு மற்றும் கோட்பாடுகள்

**5.1. எல்லை நிருணய விடயம் தொடர்பாகப் பொறுப்புக் கூறக்கூடிய சுயாதீன ஆணைக்குழுவொன்றை நியமனம் செய்தல்**.

அரசியல் யாப்பில் விதிக்கப்பட்டுள்ள அடிப்படையில் சட்டத்திற்கு இணங்கியதாக விசுவாசமாகவும் மற்றும் சுயாதீனமாகவும், ஒழுக்க நெறிகளுக்கு இசைவாகவும், நியாயமாகவும் மற்றும் வினைத்திறன் மிக்கதாக தூர நோக்கின் அடிப்படையில் செயற்படக்கூடிய எல்லை நிருணய ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படும் (எல்லை நிருணய சட்டம்)

**5.2. எல்லை நிருணய நோக்கு:**

மக்கள் பிரதிநிதித்துவத்தைக் கருத்திற் கொண்டு அனைத்து வாக்காளர்களுக்கும் மற்றும் அனைத்துப் பிரசைகளுக்கும் தேவையான தேர்தல் அல்லது வேறு நிருவாக சேவைகளை வழங்குவதற்காக எல்லை நிருணயச் சட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற மக்களின் மற்றும் சூழலின் சனநாயக உரிமைகளை உயர்ந்த விதத்திலும் மற்றும் வினைத்திறன் கொண்டதாகவும் பாதுகாக்கும் விதத்தில் பூகோள அலகுகளில் எல்லைகள் வரையறை செய்யப்படுவதை எல்லை நிருணய ஆணைக்குழு உறுதி செய்யும்.

**5.3. நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான எல்லை நிருணயம் தொடர்பான கோட்பாடுகள்**

பூகோள எல்லைகளை நிருணயம் செய்யும் போது எல்லை நிருணய ஆணைக்குழு பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளும்.

அ) இளைஞர் சமூகம் மற்றும் வாக்குரிமையுள்ள சனத்தொகையின் தேவைகளை கருத்திற் கொண்டு அந்த எல்லையினுள் வாழும் சனத்தொகையளவு (பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை)

ஆ) பிரதேசத்தின் அமைவு மற்றும் காணி, நீர் மற்றும் வன வளங்களைப் பாதுகாப்பதன் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு அந்த எல்லையினுள் உள்ள காணியின் அளவு

### 5.4. எல்லை நிருணயம் செய்வதற்காகச் செலவிடப்படும் காலப்பகுதி

தேசிய சனத்தொகைக் கணக்கெடுப்பொன்று நிறைவடைந்து இரண்டு வருடங்களுக்குள், சனத்தொகை மாற்றங்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு எல்லை நிருணய ஆணைக்குழுவினால் தேர்தல்கள் மாவட்டங்களின் பூகோள எல்லைகள் நிருணயம் செய்யப்படும். அதற்காக அடிப்படையாகக் கொள்ளப்படும் விடயங்கள் மற்றும் எல்லை மீளாய்வு எல்லை நிருணய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு வசதி செய்யப்படும்.

### 5.5. தேசிய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களுக்கான எல்லை நிருணயம்.

பாராளுமன்றத் தேர்தல் மாவட்டங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங்கள் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) தொடர்பில் பூகோள எல்லைகள், எல்லை நிருணயச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு இசைவாக எல்லை நிருணய ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

### 5.6. மாகாணங்கள் மற்றும் நிருவாக மாவட்டங்களின் எல்லைகளை நிருணயம் செய்தல்

சனத்தொகைப் மாதிரியின் மாற்றம் அல்லது சூழல் விடயங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஏதேனும் மாகாணத்தின் அல்லது நிருவாக மாவட்டத்தின் எல்லைகளை மாற்றம் செய்வதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு தேவைப்பாடொன்று ஏற்படுமிடத்து பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு பாராளுமன்றம் அப்பணியை எல்லை நிருணய ஆணைக்குழுவிற்குக் கையளிக்கும். அதன் அடிப்படைகள் மற்றும் மீளாய்வு என்பன எல்லை நிருணய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

### 5.7. அரச நிருவாக அலுவல்களுக்காக எல்லைகளை நிருணயம் செய்தல்

புதிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான எல்லைகளை நிருணயம் செய்தல், ஏற்கனவே உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான எல்லைகளை திருத்தம் செய்தல், புதிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான எல்லைகளை நிருணயம் செய்தல், ஏற்கனவே உள்ள கிராம அலுவலர் பிரிவுகளுக்கான எல்லைகளை திருத்தம் செய்தல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டுமெனில் குறித்த அமைச்சினால் அப்பணிகளை எல்லை நிருணய ஆணைக்குழுவினூடாக ஆற்றிக் கொள்வதற்காக அனுமதி பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்படும். அவ்வாறு நிருணயம் செய்வதற்குரிய காரணங்களை எல்லை நிருணய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாக பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு வசதி செய்தல் வேண்டும்.

### 5.8. முதன்மைத் தரத்திலான அரச சேவைகளை வழங்குவதற்காக எல்லை நிருணயம் செய்தல்.

முதன்மைத் தரம் கொண்ட சேவைகளை வழங்கும் அனைத்து அரச சேவைகளுக்காகவும் பூகோள எல்லை நிருணயம் மேற்கொள்ளத்

தேவைப்படுமிடத்து எல்லை நிருணய கோட்பாடுகளுக்கும், நியதிகளுக்கும் இசைவாக அவற்றை மேற்கொள்வதற்கு எல்லை நிருணய ஆணைக்குழு நடவடிக்கையெடுக்கும். புதிய சேவைப் பிரதேசங்களுக்கான எல்லைகளை மீளாய்வு செய்வதற்குத் தேவைப்படுமிடத்து குறித்த அமைச்சு அப்பணிகளை எல்லை நிருணய ஆணைக்குழுவினூடாக ஆற்றிக் கொள்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்படும். அவ்வாறு நிருணயம் செய்வதற்குரிய காரணங்களை எல்லை நிருணய சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாக பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு வசதி செய்தல் வேண்டும்.

## 6. முடிவுரை.

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு எல்லைகளை நிருணயம் செய்வதற்குத் தேவையான அனைத்துப் பிரதேசங்களும் உள்ளடங்கும் விதத்தில் செயற்படத்தக்கவாறு எல்லை நிருணய ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் என்பவற்றை பாராளுமன்றச் சட்டமொன்றினூடாக மேற்கொள்வது பொருத்தமென பரிந்துரை செய்ய விரும்புகின்றோம். இதன் மூலம் பின்வரும் பயன்கள் கிடைக்கும்

6.1. பொதுமக்களுக்கும் மற்றும் பாராளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூறும் ஒரு நிறுவனம் தோற்றம் பெறும்.

6.2. எல்லை நிருணயம் தொடர்பில் ஒரு தேசிய கொள்கையை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

6.3. சமமான ஒரு எல்லை நிருணய மாதிரியொன்று தோற்றம் பெறும்.

6.4. எல்லை நிருணய பணிகளுக்காகச் செலவிடப்படும் செலவுகளைப் பாரியளவில் குறைத்துக் கொள்ள முடியும்.

6.5. எல்லை நிருணய அலுவல்களுக்காக நிரந்தர நிறுவனக் கட்டமைப்பொன்று தோற்றம் பெறும் போது பரீட்சயமும் விசேட நிபுணத்துவ அறிவும் உள்ள வினைத்திறன் மற்றும் அனுபவம் கொண்ட பணியாட் குழுவின் மூலம் அப்பணிகளை அற்றிக் கொள்ள முடியும்.

6.6. தேசிய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுக்களுக்கிடையில் அல்லது அரச நிருவாக மற்றும் வேறு சேவைப் பிரதேசங்கள் தொடர்பாக பிரச்சினைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த நிறுவனக் கட்டமைப்புக்கு தீர்த்துவைக்க உதவி செய்யக் கூடியதாக அமையும்.

**இணைப்பு - 3A**

# வரைவு

**அமைச்சரவைப் பத்திரம்**

**எல்லை நிர்ணய செயற்பாடுகளுடன் தொடர்புடைய சட்டத்தை வகுத்தல்**

1. **பின்னணி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாம் திருத்தத்திற்கமைய 41 (ஆ) மற்றும் 95 (1) உறுப்புரைகளின் கீழ் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டதோடு, ஆணைக்குழுவின் பணிகள், பொறுப்புக்கள் மற்றும் தத்துவங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பான வழிமுறைகள் குறிப்பாகக் குறித்துரைக்கப்படவில்லை. ஆதலால், ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டங்களை றெிமுகம் செய்ய வேண்டியுள்ளது.

2. **பொழிப்பு**

2.1. இலங்கையில் எல்லை நிர்ணம் செய்தல் செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுக்கு அமைய தேசிய சனத்தொகை கணக்கெடுப்பின் பின்னர் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்குரிய தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பாக ஒரு குறித்த காலப்பகுதிக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. கையளிக்கப்பட்ட குறித்த பணிகள் நிறைவடைந்த பின்னர் இந்த ஆணைக்குழவின் பணிகள் முடிவுறுத்தப்பட்டதோடு, இதற்கு மேலதிகமாக தேர்தல்கள் மற்றம் நிருவாகப் பணிகளுக்காக தேவைப்படுகின்ற பல்வேறு விதமான எல்லை நிர்ணயங்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் செயற்படு முறைமைகள் காணப்படுகின்றன.

2.2. உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லை நிர்ணயம், மாகாண சபைகளின் எல்லை நிர்ணயம், பிரதேச மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் போன்றே தேர்தல்கள் மற்றும் நிருவாக ரீதியான எல்லை நிரணயங்கள் தவிர கல்வி, சுகாதாரம், கமநல சேவைகள், வனப்பாதுகாப்பு, வன சீவராசிகள், நீர்பாசனம், நீதிமன்றம், பொலிஸ், காணி போன்ற துறைகளின் எல்லைகளை நிர்ணயம் செய்தல் தொடர்பாக செயற்படுவதற்காக அந்தந்த விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்படுகின்ற குழுவொன்றினால் அப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.3. அதலால் காணப்படுகின்ற பொதுவான கொள்கைகள் அல்லது சட்ட திட்டங்கள் என்பனவற்றுக்கு அப்பால் சுயாதீனமாக தமது தேவைப்பாடுகளுக்காக ஒவ்வொரு துறைகளுக்காகவும் எல்லை நிர்ணய அலுவல்கள் செய்யப்படுவதன் காரணமாக பெரும்பாலான வேறு பிரிப்புக்களில் ஒத்ததன்மை மற்றும் ஆட்புல நிலையானதன்மை என்பன காணப்படவில்லை. அதே போன்று இவ்வாறான சமமற்ற தன்மை காரணமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றம் வேறு நியதிச் சட்ட நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பிரச்சினைகள் தோன்றியுள்ளன. ஒரே விதமான நிருவாகப் பிரிவுகளிடையே மாத்திரமின்றி சமமான விடயத் துறைகளிலும் பாரிய முரண்பாடுகளை அவதானிக்க முடிகின்றது. இந்த பாதகமான நிலைமை நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்றே நிருவாக வழிமுறைகளையும் உறுதியான வித்தில் பேணிச் செல்வதில் தடையாக உள்ளன.

3. **முன்மொழிவுகள்**

3.1. எல்லை நிர்ணயம் தொடர்பில் தற்போது காணப்படுகின்ற கொள்கைகளை தேசிய தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வித்தில் தயாரிக்க வேண்டியுள்ளது, அதற்கமைய எல்லை நிர்ணயப் பணிகள் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்படுகின்ற மற்றும் மறுசீரமைக்கப்படுகின்ற நிலையான கோட்பாட்டு முறைமைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட சட்டகமொன்றின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஒழுங்கமைந்த நிலையான கட்டமைப்பைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

3.2. ஆதலால் தேர்தல்கள் எல்லை நிர்ணயம் செயதல் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயத் துறைகளுக்காக எல்லை நிர்ணய அலுவல்களை மேற்கொள்வதற்காக தனித்தனியாக குழுக்களை நியமனம் செய்வதற்குப் பதிலாக பத்தொன்பதாம் அரசியல் யாப்பின் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ள எல்லை நிர்ணய ஆணைக்குழு மூலம் இப்பணிகளை ஆற்றிக் கொள்வது மிகவும் உசிதமாக அமையுமென்பதோடு, அதன் மூலம் சமமான சட்டகமொன்றினுள் நிலையான கோட்பாட்டு முறைமைக்கமைய செயற்படுகின்ற வழிமுறையொன்றை தாபித்துக் கொள்ள முடியும்.

3.3. இவ்வாறான தேசிய வழிமுறையொன்றினூடாக தேசிய எல்லை நிர்ணய செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக அரச மற்றம் நியதிச் சட்ட நிறுவனங்களின் நிருவாக மற்றம் அபிவிருத்திச் பணிகளுக்கிடையில் சிறந்த தொடர்பொன்று கட்டியெழுப்பப்படும்.

4. **அனுமதி**

1. இதற்கமைவாக இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள பின்னணி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரிவான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையினுள் எல்லை நிர்ணயப் பணிகளை மேற்கொள்ளும் முழுமையான பொறுப்புக்களை எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்கான சட்டமொன்றை வரைவதற்காக சட்டமா அதிபர் அவர்களுக்கு அனுப்பி வப்பதற்கும்,

2. சட்டமா அதிபர் அவர்களால் வரையப்படுகின்ற புதிய சட்டத்தை அனுமதிக்காக இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவும் அமைச்சரவையின் அனுமதியை எதிர்பார்க்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேன.
சனாதிபதி,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு.

2017 ஒத்தோபர் மாதம் …….. ஆம் திகதி

## இணைப்பு – 4

**பிரதிநிதித்துவ முறை**

01. பொதுமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுகின்ற, இறுதியாக பொதுமக்கள் வசம் அதிகாரம் சென்றடைகின்ற ஆட்சி முறையொன்றாக சனநாயக ஆட்சி முறை ஏற்றுக்கொள்ளப்படுவதனால், பொதுமக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு எடுத்துக்கொள்வது எவ்வாறென்பது முக்கியமான ஒரு விடயமாகும். பொதுமக்கள் ஆட்சியில் பங்குகொள்வது பிரதிநிதிகளூடாகவாதலால் நிகழ்கால சனநாயகம் "பிரதிநிதித்துவ சனநாயகத்துவம்" எனஅழைக்கப்படுகின்றது.

02. பொதுமக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அமைப்பும், அதற்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறையும் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமான அந்நாட்டின் அரசியல் அமைப்பிலும் தேர்தல் நியதிச்சட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஒரு நாட்டின் தேர்தல்முறை அந்நாட்டின் வரலாற்று, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளோடு பிணைந்த பல் வேறுகாரணிகளின் அழுத்தம் காரணமாக உருவானதும் மக்களின் தேவைகளுக்கேற்ப அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதுமான ஒரு முறையென அழைக்கமுடியும். காலனித்துவ நாடுகளாகக் காணப்பட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர், அமைத்துக்கொண்ட தமது நாடுகளுக்கான ஆட்சிமுறைமைகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைமைகள், காலனித்துவ ஆட்சியாளர்களின் தாய்நாடுகளில் பின்பற்றப்பட்ட முறைகளைப் பெரிதும் ஒத்தமுறைகளில் அமைப்பதற்கான பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அத்தகைய நாடுகளின் வரலாற்றுத் தகவல்களைப் பரிசீலிக்கின்ற போது தெளிவாகின்ற ஒரு விடயமாகும். இவ்விதத்திலான அழுத்த மொன்று பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் இலங்கையின் விடயத்திலு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. "பிரதிநிதித்துவம்" தொடர்பான கோட்பாடு நிகழ்காலத்தில் பல்வேறு விதங்களில் பொருள் கோடல் செய்யப்படுகின்றது. சட்டவாக்கச்சபையொன்றிற்கு ஏதேனுமொரு தேர்தல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதி அத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறப்படுவதால் இங்கு நிகழ்கின்ற பிரதிநிதித்துவமுறை "அபிலாசைப்பிரதிநிதித்துவம்" எனஅழைக்கப்படுகின்றது. பிரதிநிதி தமது தொகுதிக்குள் உள்ள வாக்காளர்கள் சார்பாக சட்டவாக்க சபைக்குள் பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டு வாக்காளரின் நலனுக்காக நடவடிக்கையெடுப்பாரென நம்பப்படுகின்றது. அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டியவிதம் குறித்த இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. பிரதிநிதிதான் சட்டவாக்கச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட தேர்தல் தொகுதியின் விருப்பத்திற்கமைய நடந்து கொள்ளல் வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். அது தொடர்பாகவுள்ள அடுத்த கருத்துயாதெனில் பிரதிநிதி தமது தொகுதிக்கு சிறந்தவையெனத்தான் கருதுகின்றவிதத்தில் நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தாகும்.

04. நிகழ்காலத்தில் அரசியல் கட்சிகள் என்ற அமைப்புக்களின் சில கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கையெடுப்பதற்கு, அங்கத்தினர்களாக அவற்றோடு இணைந்து நடவடிக்கையெடுப்பவர்கள் தேர்தல்களின் போது கட்சியினால் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன் வைக்கப்படுகிறார்கள். இப் பணியின்போது அரசியல் கட்சிகள், இடைத்தரகர்களாக செயற்படுவதனால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற வேட்பாளர்களில் ஒருவரை நிகழ்கால தேர்தல்களின் போது தமது வாக்கினை வழங்கி தேர்ந்தெடுக்க வேண்டிய நிலைவாக்காளருக்கு ஏற்பட்டுள்ளது.

05. தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கிற்கும் செயற்படுவதைக் காணமுடிகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய முறைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவமுறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

06. இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் (Majority System) கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர் ,பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். (First Past the Post System – FPP) அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையொன்றை (Absolute Majority) பெற்றிருக்கின்றார் எனக்கருத்தில் கொள்ளப்படவும் மாட்டாது. ”இது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை” எனவும் அழைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் நடாத்தப்படுகின்ற மாகாணசபைத் தேர்தல்களின் போது நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசி (50% ) இம் முறையின் கீழ் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

07. விகிதாசார பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் (Proportional Representative System) ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காளரினால் தமது வாக்குகள் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடையாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது. உரிய கட்சி அல்லது குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்திற்கமைய அவற்றிற்கான ஆசன உரித்துரிமை கிடைக்கப்பெறுவதோடு, வேட்பாளர்கள் பெற்றுக்கொள்கின்ற விருப்புகளின் எண்ணிக்கை ஒழுங்கு வரிசைக்கமைய உரிய உறுப்புரிமைக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தற்போது இலங்கையில் அமுல் செய்யப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தல்களிலும், மாகாணசபைத் தேர்தல்களிலும் இதற்கமையவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறைமையின் அடிப்படைத்தத்துவம் யாதெனில், ஒரு தரப்பினரால் உரித்தாக்கிக் கொள்ளப்படுகின்ற உறுப்புரிமைகளின் எண்ணிக்கைக்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வாக்குகளுக்குமிடையே குறிப்பான ஒரு விகிதாசாரமுறை பேணப்படுகின்றதென்பதாகும்.

08. விகிதாசார முறைமையின் கீழ் வாக்காளருக்கு உரிய கட்சியை (தரப்பை) மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கப்படுகின்ற ஒருமுறையும் சில நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய நாடுகளில் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலின் தொடர் ஒழுங்கு தீர்மானிக்கப்படுவ கட்சியினாலேயேயாகும். இவ்வாறான பட்டியல் முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் கட்சிகளுக்கு தொகுதிகளின் உரித்துரிமை கிடைக்கப்பெறுகின்றமை காரணமாக தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி வாக்குகளின் சதவீதத்தைப் பெற்றுக் கொள்வதும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. 1981 ஆம்ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 12½ சதவீதமாகவிருந்த இச் சதவீதஅள பின்னர் 5% சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்ட முதலாவது சட்டத்திற்கமைய கட்சியினால் அல்லது குழுவொன்றினால் கையளிக்கப்பட வேண்டிய வேட்புமனுப்பத்திரமொன்றில் வேட்பாளர்களின் பெயர்கள் அவ்வேட்பாளர்களின் முன்னுரிமை ஒழுங்கிற்கமையவே (the order of Priority) உட்சேர்க்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இம்முறைமை 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது.

**இலங்கையின் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களும் தேர்தல்முறைகளும்.**

09. இலங்கைப்பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகிய மக்கள் பிரதிநிதிகளின் நிறுவனங்களுக்குரிய தேர்தல்கள் நியதிச் சட்டங்களுக்கமைய தேர்தல்களை நடாத்தி உரிய காலப்பகுதிக்காக அவற்றிற்கான மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1977 ஆம் ஆண்டு வரை தேர்தல் தொகுதிகளின் கீழ் எளிய பெரும்பான்மை முறைக்கமைய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்முறை, 1978 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பைத் தொடர்ந்து விகிதாசாரமுறையாக மாற்றியமைக்கப்பட்டது. 1950களிலிருந்து பிரதிநிதித்துவ தேர்தல் தொகுதியின் கீழ் தேர்தலொன்றிலே போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப்பெற்ற வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் முறையிலேயே உள்ளூர் அதிகாரசபைகளுக்கான பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அத் தேர்தலும் 1989ஆம் ஆண்டிலிருந்து விகிதாசார முறைக்கமைய செயற்படுத்தப்படுவதற்குத் தேவையான சட்டம் இயற்றப்பட்டது. 1987ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மாகாண சபைகளுக்கும் ஆரம்பம் முதலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் மேற்கொள்ளப்படுவதற்குத் தேவையான நியதிச்சட்டம் 1988 ஆம்ஆண்டின் 2 ஆம் இலக்கம் மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது.

10. மேற் குறித்த தேர்தல் முறைகள் தவிர நிறைவேற்று சனாதிபதி அவர்களை நேரடியாக மக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான நியதிச்சட்டம் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதித்தேர்தல் சட்டத்தின் மூலமும் 1981ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க மக்கள் தீர்ப்புச்சட்டத்தின் மூலம் மக்கள் தீர்ப்பை நடாத்தி, சிற்சில விடயங்களில் சட்டஆக்கத்தோடு தொடர்புடைய மக்கள் கருத்துக்களை நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு 1978ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பின் மூலம் அவகாசம் அளிக்கப்பட்டது.

11. மேலே காட்டப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் சபைகளுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அமுல்படுத்தப்பட்ட விகிதாசார தேர்தல்முறைகளிடையே சிற்சில வித்தியாசங்களை காணமுடியுமான போதிலும், பெரும்பாலும் அத் தேர்தல் முறைகளில் ஒரு சமத்துவநிலையைக் காணமுடிந்தது. அத் தேர்தல்முறைகளின் அடிப்படைப் பண்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. பெரியளவிலான தேர்தல் மாவட்டமொன்றுக்காக உறுப்பினர்கள் குழுவொன்றை வாக்குமூலம் தேர்ந்தெடுத்தல்.

ii. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று அல்லது சுயேச்சைக்குழுவொன்றினால் வேட்பாளர் குழுவொன்றின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட வேட்புமனுவொன்றை வேட்புமனுக்காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குக்கையளித்தல்.

iii. வாக்காளரொருவருக்கு தான் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவிற்கு வாக்கையளிப்பதற்கும் அக் கட்சியை அல்லது குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளர்கள் மூவருக்கு விருப்புக்களை வெளிப்படுத்துவதற்கும் இடமளித்தல். (உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் ஓரே வேட்பாளருக்குக்கூட தமது மூன்று விருப்புக்களையும் அளிப்பதற்கு வாக்காளருக்கு இடமளிப்பதற்கான சட்டத்திருத்தம் பிற்காலத்தில் கொண்டுவரப்பட்டது.)

iv மக்கள் பிரதிநிதிகள் நிறுவனங்களுக்கு கட்சிகளிலிருந்தும் சுயேச்சைக்குழுக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரித்தாகுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை அத் தேர்தலில் உரிய கட்சி அல்லது குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசரத்திற்கமைய தீர்மானிக்கப்படல்.

V. ஒரு கட்சி / ஒரு குழுஉரித்தாக்கிக்கொண்டுள்ள உறுப்புரிமைகளின் எண்ணிக்கைகளுக்கு கட்சியின் / குழுவின் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்புகளின் எண்ணிக்கையின் ஒழுங்கு வரிசைக்கமைய பிரதிநிதிகளை நியமனம்செய்தல்.

vi. பாராளுமன்றத் தேர்தல்களில் நாடெங்கிலுமுள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் கட்சிகள் /குழுக்கள் முழு நாட்டிலுமிருந்து பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப 29 உறுப்பினர்கள் அவற்றிற்கு வழங்கப்படல். (அரசியல் அமைப்பின் 99அஆம்உறுப்புரைக்கமைய)

vii. மாகாணத்தின் நிருவாக மாவட்டங்களிலிருந்து அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு அல்லது குழுவிற்கு மாகாணசபைத் தேர்தலில் 2 மிகை ஆசனங்களை வழங்குதல். (பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கேற்ப குறித்தொதுக்கப்படுகின்ற உறுப்புரிமைகளின் எண்ணிக்கைகளுக்கு மேலதிகமாக)

viii. பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 2 உறுப்புரிமைகள் தேர்தல் மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு அல்லது குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சுகின்ற மீதமான உறுப்பினர்களின் எண்ணிக்கை மாத்திரம் கட்சிகளினதும் குழுக்களினதும் வாக்குகளின் எண்ணிக்கையின் விகிதாசரத்திற்கேற்ப பகிர்ந்தளிக்கப்படல்.

ix. பாராளுமன்றத்திற்குத் தேர்தல் மாவட்டமொன்றின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் வேட்பாளருக்கு உரித்தான கட்சியின்/குழுவின் வேட்புமனுவில் எஞ்சியிருக்கின்ற அடுத்த வேட்பாளரை நியமனஞ்செய்வதனூடாக நிரப்புவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் நடவடிக்கையெடுத்தல்.

x. அரசியல்அமைப்பின் 99அஆம் உறுப்புரையின்கீழ் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல் உரிய கட்சியிலிருந்து அல்லது சுயேச்சைக்குழுவிலிருந்து பெயர் குறித் நியமனத்தினூடாக நிரப்பப்படுதல்.

12. இலங்கையின் மக்கள் பிரதிநிதிகளின் நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்காக பிரதேசரீதியாக, மாகாணரீதியாக மற்றும் தேசியரீதியாக நடாத்தப்படுகின்ற தேர்தல்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டவை. 1977ஆம் ஆண்டின் பின்னர் இம் முறையின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தல்கள் காரணமாக ஏற்படக்கூடிய குறைபாடுகளாக பெரும்பாலானவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை பல்வேறுவழிகளிலும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகின்றது.

I. குறித்த ஒரு தொகுதிக்கு வகைகூறக்கூடிய பிரதிநிதியொருவர் வாக்காளருக்குக் கிடைக்கப்பெறாமை
II. தேர்தல் தொகுதிகள் விசாலித்துள்ளமையால் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக உரியதரப்பினர்களுக்கு பெருந்தொகையான பணத்தை செலவழிக்க வேண்டியேற்பட்டுள்ளமை.
III. அதிகூடிய விருப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் ஒரே கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்களிடையே பிணக்குகள் ஏற்படலும் அப்பிணக்குகள் காரணமாக தேர்தல் காலங்களில் வன்முறைகள் உருவாதலும்.
IV. தேர்தல் வெற்றிக்காக மேற்கொள்ளப்படவேண்டிய தேர்தல் செலவினத்தை ஈடுசெய்யத்தக்க நிதியாற்றலுடன் கூடிய வேட்பாளர்களை போட்டியிட வைப்பதற்கு உரியதரப்பினர்

நடவடிக்கையெடுத்தமைக்காரணமாக மக்கள் சேவைக்குப் பொருத்தமற்ற ஆட்கள்கூட தேர்தலில் போட்டியிட முன்வந்தமை.

V. வாக்குகளை எண்ணலும் முடிவுகளை வெளியிடலும் சிக்கல் மிகுந்த ஓர் அலுவலாகக் காணப்படுகின்றமை.

13. தற்போது இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென இந்நாட்டின் சட்டவாக்கத்துறையின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்ததோடு, அதற்கான விடயங்களைக் கண்டறிந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு தேர்தல் திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் விசேட செயற்குழுவொன்று ஆறாம் பாராளுமன்றத்தினால் 2007 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டிருந்தது.

14. இவ் விசேட செயற்குழு தனது இடைக்கால அறிக்கையை 6ம் பாராளுமன்றத்தின் 2ம் அமர்வின் 8ம் கூட்டத்தொடரில்வியிட்டது.

15. இவ் விசேட செயற்குழுவினால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையில் "மாகாணசபைத்தேர்தல்" என்ற உப தலைப்பின் கீழ் தற்கால மாகாணசபை பிரதிநித்துவமுறை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைவருமாறு.

*"உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் பரிந்துரைகள் மற்றும் செயற்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகளைக் கருத்திலெடுத்த செயற்குழுவின் கருத்தாவது நிகழ்கால விகிதாசார பிரதிநிதித்துவமுறை மற்றும் விருப்புவாக்குகளை அடிப்படையாகக்கொண்ட நிகழ்கால தேர்தல் முறைக்குப் பதிலாக உத்தேச பாராளுமன்ற முறைக்கு இணங்கக்கூடிய தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவமுறை, 2:1 என்ற விகிதாசாரத்தில் கலப்புமுறைத் தேர்தலொன்றாக அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்பதாகும்"*

**தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்.**

16. நாட்டில் தேர்தல் தொகுதிகளை பிரித்தொதுக்கி சட்டவாக்கசபைக்கு பொதுமக்களின் வாக்குகள்மூலம் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்பும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்கு முதல் முதலாக வாய்க்கப்பெற்றது 1911 ஆம் ஆண்டிலேயே ஆகும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரிலிருந்தே இந்நாட்டில் செயற்படுத்தப்பட்ட பிரதான சட்டவாக்கச்சபை 1978 ஆம் ஆண்டுவரை பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. அக் காலப்பகுதிக்குள் அதற்கான பிரதிநிதிகளை நியமனம் செய்வதற்கான சட்டம் மற்றும் அதனோடு தொடர்புடைய செயன்முறை ஏறத்தாழ 70 ஆண்டுகள் பல்வேறு மாற்றங்களுக்கு இலக்காகியது. இலங்கையின் காலனித்துவ ஆட்சிகாலத்தில் சட்டவாக்கத்துறைக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதத்திலேனும் வாக்குரிமையை அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்த இலங்கையர்களுக்கு தமது வாக்கின்மூலம் 4 தனிஅங்கத்தவர் தொகுதிகளின் கீழ் 4 பிரதிநிதிகளை சட்டவாக்கசபைக்கு 1911 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. 1910 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க கட்டளைச்சட்டத்தின் 3 - 5 வரையிலான பிரிவுகளில் அவ்வொவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் இணைக்கப்பட்ட அக்காலத்தில் இலங்கையில் நடைமுறையிலிருந்த நிருவாக மாவட்டங்களின் விபரங்கள் காட்டப்பட்டன.

17. இலங்கையின் பிரதான சட்டவாக்கச்சபைக்கு போலவே உள்ளூர் அதிகாரசபைகளுக்கான பிரதிநிதிகளும் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பான நீண்டகால அனுபவமொன்று இலங்கை மக்களுக்குக் காணப்படுகின்றது. 1911ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டு வரை அமுலிலிருந்த சட்டவாக்கசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒரு பகுதியினர் மாத்திரம்

இவ்வாறு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1911 ஆம் ஆண்டில் 4 பேரும், 1920 ஆம் ஆண்டில் 16 பேரும், 1923 ஆம் ஆண்டில் 29 பேருமாக தொகுதி வாரியாக சட்டவாக்கசபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்தல் தொகுதிகளுக்கான எல்லைகள் அக்காலத்தில் காணப்பட்ட நிருவாக பிரிவுகளின் எல்லைகளை மாத்திரம் கருத்திலெடுத்து நிறுவப்பட்டமையால் அவ்வாறு நிறுவப்படுகின்ற தொகுதிகளில் இடப்பரப்பு மற்றும் சனத்தொகையின் அளவீடு தொடர்பாக அக்கறை காட்டப்படாமை காரணமாக அவற்றின் வாக்காளர்களின் எண்ணிக்கையிலும், இடப்பரப்பிலும் பெருமளவிலான வித்தியாசங்களைக் காணமுடிந்தது. இவ்வாறு தொகுதிகளிடையே வாக்காளர்களின் எண்ணிக்கையில் வித்தியாசம் ஏற்படுவதற்கு அந்தந்த தொகுதியில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கு நபர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தகைமைகளின் பன்மைத்துவமும் செல்வாக்கும் காரணங்களாக விளங்கின. சில தேர்தல் தொகுதிகள் குறிப்பாக ஏதேனுமொரு இனத்தினருக்குரித்தான பிரதிநிதிகளை மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்காக குறித்தொதுக்கப்பட்டிருந்தமையும் அப்போது காணமுடிந்த ஓர் இயல்பாகவிருந்தது.

18. அரசபேரவைத் தேர்தலுக்காக தேர்தல் தொகுதிகளை நிறுவுவதற்கு 1931ஆம் ஆண்டில் வேறானதொரு எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அவ் விடயத்திற்காக வருமான கட்டுப்பாட்டுப்பிரிவுகள், கிராம பிரதானிகளுக்கான பிரிவுகள், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நீதிமன்ற அதிகாரஎல்லைகள் போன்ற நிருவாக அலகுகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொள்வதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டது. தவிசாளர் ஒருவரையும் இரண்டு அங்கத்தினர்களையும் கொண்டிருந்த அவ்வாணைக்குழு ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்டது. மாகாணங்களை அடிப்படையாகக் கொண்ட அத் தேர்தல்தொகுதிகளின் பிரிவிலுக்கேற்ப வேறுபிரிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 50 ஆகவிருந்தது.

19. அதனைத் தொடர்ந்து 1933.08.11 ஆந் தேதி மீண்டும் மூன்று அங்கத்தினர்களை உள்ளடக்கிய தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றூடாக தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் போதிலும், அச்சந்தர்ப்பத்தில் ஆரம்பத்தில் காணப்பட்ட அரசபேரவைத் தேர்தல்தொகுதிகள் பலவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பது மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது.

20. பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களை நடாத்துவற்குரிய தேர்தல் தொகுதிகள் தாபிக்கப்பட்டமை அதனை தொடர்ந்தே நிகழ்ந்தது. இதற்காக 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியல்அமைப்பு) அரசகட்டளையின் 76ஆம் உறுப்புரையின் கீழ் ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்ட தேர்தல்தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழு மூன்று அங்கத்தனர்களை உள்ளடக்கியிருந்தது. இவ்வாணைக்குழுவின் பணிகள் 41 மற்றும் 76 ஆம் உறுப்புரைகளினால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. இறுதியான மக்கள் தொகைக ணிப்பீட்டுக்கமைய 9 மாகாணங்களிலும் 75,000 சனத்தொகைக்கு ஒரு தொகுதி வீதமும், மாகாணத்தின் பரப்பளவிற்கமைய 1000 சதுரமையில் பரப்பளவிற்கு ஒரு தொகுதி என்ற வகையிலுமாக இரண்டு விதங்களில் ஒரு மாகாணத்திற்கான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை உரிய ஆணைக்குழு தீர்மானிக்க வேண்டியிருந்தது. அந்தந்த மாகாணத்தின் பரப்பளவிற்கேற்ப உரித்தான உறுப்புரிமைகளின் எண்ணிக்கை 41 (2) உறுப்புரையில் காட்டப்பட்டிருந்தது. அவற்றின் மொத்த எண்ணிக்கை 25 ஆகும். தொகுதிகளை வேறு பிரிக்கின்ற போது வதிவாளர்களின் சமூக மற்றும் இனக்குழும இயல்புகளை கருத்திலெடுத்து ,தேர்தல் தொகுதிகளை வேறு பிரிப்பதற்கும் சட்ட ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் நிறுவப்பட்ட மொத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 89 ஆகும். பல்அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளையும் உள்ளிட்ட வகையில் இத் தொகுதிகளிலிருந்து தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 95 ஆகும். இவ்வாணைக்குழுவின்

பரிந்துரைக்கமைய 5 பல்அங்கத்தவர் தொகுதிகளும் நிறுவப்பட்டதோடு, கட்டளைச் சட்டத்தின் பதினோராம் உறுப்புரைக்கமைய தேர்தலின் பின்னர் ஏதேனுமொரு இனக்குழுமத்திற்குத் தேவையானஅளவு பிரதிநிதித்துவம், பிரதிநிதித்துவ சபைக்குள் காணப்படுவதில்லையென ஆளுநர் கருதுவாராயின் அவருக்கு தனது தற்றுணிபுக்கிணங்க இன்னும் 6 உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கு இடமளிக்கப்பட்டமையால் பிரதிநிதிகள்சபையின் மொத்தபிரதிநிதிகளின் எண்ணிக்கை 101 ஆகவிருந்தது.

21. அவ்வரசியல் அமைப்பின் கீழ் நிகழ்ந்த அடுத்த பாராளுமன்றத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் 1959ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அரசியல் அமைப்பின் 76ஆம் உறுப்புரைக்கமைய அமைக்கப்பட வேண்டிய தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையின் அதிகூடிய மட்டுப்பாடு தொடர்பான விதி இச்சந்தர்ப்பத்தில் நீக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்குகையில் கருத்திலெடுக்க வேண்டியிருந்த "ஆட்களின்எண்ணிக்கை" என்பதற்குப் பதிலாக "இலங்கை பிரசைகளின் எண்ணிக்கை" என்பதை ஏற்புடைத்தாக்கிக் கொள்ளவேண்டுமென இம்முறை ஆணைக்குழுவிற்கு கட்டளையிடப்பட்டது. 1959ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை (அரசியலமைப்பு) திருத்தச்சட்டத்தின் காரணமாக இம்முறை ஆணைக்குழுவின் பணிகள் மாற்றத்திற்கு இலக்காகின. இவ்வாணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய முழுநாடும் 145 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டதோடு, இதில் 5 பல்அங்கத்தவர் தொகுதிகளும் உள்ளடக்கப்பட்டன. பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென விதிக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 151 ஆகவிருந்தது.

22. 1972 ஆம்ஆண்டின் குடியரசு அரசியலமைப்பின் 77 முதல் 81 வரையிலான உறுப்புரைகள் மற்றும் 1975 பெப்புரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட முதலாம் அரசியலமைப்பு திருத்தம் ஆகியவற்றின் காரணமாக தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்திற்காக அதுவரை 1946 ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கமைய ஏற்புடையதாக காணப்பட்டவிதிகள் ஓரளவு மாற்றமடைந்தன. இம்முறை 90,000 பிரசைகளுக்கு ஒரு தொகுதியை அமைக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய திருத்த நிலைமைகளுக்கமைய 1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்திற்கமைய 6 பல்அங்கத்தவர்கள் தொகுதிகளையும் உள்ளடக்கிய 160 மொத்த தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 ஆகவிருந்தது.

23 1978ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 95 ஆம் உறுப்புரைகமைய 1978 நவம்பர் மாதம் நியமனம் செய்யப்பட்ட தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு அவ்வரசியலமைப்புக்கமைய ஒருமுறை மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்ற தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயபணிகளில் ஈடுபடவேண்டியிருந்தது. முந்திய சந்தர்ப்பங்களோடு ஒப்பிடுகையில் இலங்கையின் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல்முறை செயற்படுவதற்கு அடிப்படையான தேர்தல் மாவட்டங்களை பிரித்தொதுக்குவதற்கு கட்டளையிடப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இச் சந்தர்ப்பம் விளங்கியமை ஒரு விசேடமான விடயமாகக் காட்டப்படமுடியும். மாகாண எல்லைகளைக் கருத்திலெடுத்து மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள நிருவாக மாவட்டங்களின் எல்லைகள் மாற்றமடையாதவாறு முழுநாடும் 20ற்குக்குறையாததும் 24ஐ விஞ்சாததுமான தேர்தல் மாவட்டங்களாகப் பிரித்தொதுக்கப்பட்டு, அவற்றை அடையாளம் காண்பதற்கான இலக்கமொன்றையும் பெயர் ஒன்றையும் வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளும் காணப்பட்டன. மாகாணத்தில் அமைக்கப்படுகின்ற தேர்தல் மாவட்டங்களிடையே 4 உறுப்பினர்கள் நியாய பூர்வமாக பகிர்ந்தளிப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பிர்களின் எண்ணிக்கை 36 ஆகவிருந்தது.

24. வேறு எந்தவோர் அளவீடும் தேர்தல் தொகுதி பகிர்ந்தளிப்பு தொடர்பான உரிய அரசியல் அமைப்பு ஏற்பாடுகளுக்குள் இம்முறை உள்ளடக்கப்படாமை விசேடமான ஒரு சிறப்பியல்பாகும். அதற்குப் பிரதான காரணம் அரசியல் அமைப்பின் 98(8) ஆம் உப உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தில் உள்ளடக்கப்படுகின்ற 160 உறுப்பினர்களும் தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் நிறுவப்படுகின்ற தேர்தல் மாவட்டங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் விதம் தேர்தல்கள் ஆணையாளரினால் ஒவ்வோர் ஆண்டும் வாக்காளர் கணக்கெடுப்பின் பின்னர் தேர்தல் மாவட்டங்களின் வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையேயாகும்.

25. 1978ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் பாராளுமன்றத்தினால் மாகாணசபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டு விகிதாசார பிரதிநிதித்துவமுறை செயற்படுத்தப்பட்டது. அதன்பின்னர் இம்முறைமை மற்றும் தொகுதிவாரியாக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை ஆகிய இரு முறைமைகளும் கலந்த கலப்புத் தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை பாராளுமன்றம் மேற்கொண்டது. 2012 ஆம் ஆண்டு வரையிலும் உள்ளூர் அதிகாரசபைகள் தாபிக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய நிறுவனமொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் அதிகார எல்லையை நிர்ணயித்தல் போன்றன மாநகரசபைகள் மற்றும் நகரசபைகள் கட்டளைச்சட்டங்கள், பிரதேசசபை சட்டம் என்பவற்றிற்கிணங்க உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. 1977 இன் பின்னர் உள்ளூர் அதிகாரசபை நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் அடிப்படையில் நிகழ்ந்தமையால் அவ்வுள்ளூர் அதிகாரசபைகளின் முழுமொத்த அதிகார எல்லை பிரதேசமும் ஒரு முழுமொத்த தேர்தல் இடப்பரப்பாக கருதப்பட்டு வட்டாரங்களாக பிரிக்கப்படாமல் அந் நிறுவனங்களுக்கான பிரதிநிதிகள் குழுவைத் தேர்ந்தெடுக்க முடியுமாயிற்று. ஆயினும் 2012 ஆம்ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் உள்ளூர் அதிகாரசபைகளின் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினரை தேர்ந்தெடுப்பதற்காக வட்டாரங்களின் எல்லை நிர்ணய நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

26. ஆண்டு 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் சட்டமாக்கப்பட்ட உள்ளூர் அதிகாரசபைகள் கட்டளைச் சட்டத்திற்குக் கொண்டு வரப்பட்ட தேர்தல் தொடர்பான சட்டத்திருத்தங்கள் மூலம், உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 60% சதவீதமானவர்கள் அவ்வதிகார எல்லைப் பிரதேசம் வேறுபிரிக்கப்படுகின்ற தேர்தல் இடப்பரப்புக்களான பிரதிநிதித்துவ வட்டாரத்தின் கீழ் எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவமுறையிலும், ஏனைய 40% விதமான உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநித்துவமுறையிலும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இதற்கு மேலதிகமாக பெண் உறுப்பினர்கள் ஒருதொகையினரை, தேர்ந்தெடுப்பதற்கும் இயலத்தக்க விதத்திலான உரிய சட்டத்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

27. இதற்காக உள்ளூர் அதிகாரசபை அதிகார எல்லைகளை வட்டாரங்களாகப் பிரிப்பதற்கு 5 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழு உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் 2012..12.07 ஆந் தேதி நியமனம் செய்யப்பட்டது. அவ் வட்டாரங்களைப் பிரிப்பதில் அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் அச்சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு, உரிய சட்டத்தின் கீழ் தனிஅங்கத்தவர் வட்டாரங்களையும் பல்அங்கத்தவர் வட்டாரங்களையும் பிரித்தொதுக்குவதற்கான அதிகாரமும் கிடைக்கப்பெற்றது. வேறுபிரிக்கப்படுகின்ற வட்டாரங்களுக்கான இலக்கங்களையும் பெயர்களையும் நிர்ணயிக்க வேண்டியிருந்ததோடு. அவ்வொவ்வொரு வட்டாரத்தின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கிய குழுவின் அறிக்கை

அமைச்சரினால் சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அம்முடிவுகளை மீண்டும் மீளாய்வு செய்வதற்காக உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வேறொரு குழுவை அமைப்பதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

**ஆட்சியைப்பன்முகப்படுத்துதல், மாகாணசபைகளை நிறுவுதல் மற்றும் மாகாணசபைகளின் பிரதிநிதித்துவம்.**

28. இலங்கையின் ஆட்சி நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்களை ஆராய்ந்து பார்க்கையில், பிரித்தானிய காலனித்துவயுகத்தில் இந்நாட்டில் நிறுவப்பட்ட மிகப்பெரிய நிருவாக இடப்பரப்பாக அடையாளம் காணமுடிந்த "மாகாணங்கள்" நிகழ்காலத்தில் நியதிச்சட்ட அதிகாரங்களுடன் கூடிய ஓர் ஆட்சி அதிகாரத்தின் கீழுள்ள அதிகார எல்லையாக மாறியுள்ளமை நிருவாக, சமூக, அரசியல்ரீதியான விடயங்கள் பலவற்றிற்கு அழுத்தம் செலுத்தக்கூடிய வரலாற்றுரீதியான ஒரு மாற்றமென அடையாளம்காணமுடியும்.

29. இந்நாட்டின் ஆட்சி நடவடிக்கைகள் தொடர்பாக 1823ஆம் ஆண்டில் ஆராய்ந்தறிந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் நியமனம் செய்யப்பட்ட கோல்புறுக்–கெமெறுன் ஆணைக்குழுவின் பரிந்துரையாக அமைந்தது யாதெனில், உயர்நிலம் மற்றும் கரையோரப்பிரதேசங்களில் நிறுவப்பட்டிருக்கின்ற "மாவட்டங்களின் எண்ணிக்கை" தேவையான அளவிலும் அதிகமாதலால், அப்பிரதேசங்களை உள்ளடக்கியவாறான அதனிலும் பார்க்க இடப்பரப்பில் கூடிய "மாகாணம்" என்ற பெயரிலான நிருவாக அலகொன்றை நிறுவவேண்டுமென்பதாகும். அதற்கமைய அக்காலத்தில் 4 நிருவாக அலகுகளாக விளங்கிய 22 மாவட்டங்கள், 9 திசாவைகள், "மாகாணங்கள்" என்ற வகையில் அக்காலத்தில் காணப்பட்ட 4 அலகுகள் மற்றும் தீவு(நெடுந்தீவு) ஆகிய பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் அவ்வலகுகள் 5 மாகாணங்களாகத் தாபிக்கப்பட்டன. அவை 1833 ஒத்தோபர் மாதம் 01 ஆந் தேதிய வெளிப்படுத்துகையொன்றூடாக வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய ஆகிய பெயர்களில் இவை அழைக்கப்பட்டன.

30. இவ்வாறு முதல் முதலாக நிறுவப்பட்ட 5 மாகாணங்கள் காலத்திற்குகாலம் திருத்தம்செய்யப்பட்டு மேலும் நான்கு மாகாணங்கள் நிறுவப்பட்டு மாகாணங்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரிக்கப்பட்டது. இதற்கமைய 1845 இல் வடமேல் மாகாணமும் 1873ல் வடமத்திய மாகாணமும் 1886 இல் ஊவாமாகாணமும் 1889 இல் சபரகமுவ மாகாணமும் என இம் மாகாணங்கள் நிறுவப்பட்டன. அதனைத் தொடர்ந்து இம் மாகாணங்களுக்குள் அமையப் பெற்றுள்ள வருமான மாவட்டங்களை மையமாக வைத்து நிருவாக நடவடிக்கைகள் பிரபல்யமடைந்ததோடு, மாகாணங்களுக்கு நிருவாக அலகுகள் என்ற வகையிலிருந்த முக்கியத்துவம் வீழ்ச்சியடைந்தது. 1955 ஆம் ஆண்டின் நிருவாக மாவட்டங்கள் தொடர்பான சட்டத்தினால் அரசாங்க அதிபரின் அதிகார எல்லையாக நிருவாக மாவட்டம் பெயர் குறிக்கப்பட்டதைத் தொடர்ந்து "மாகாணம்" நிருவாக வழிநடாத்தலின்மையமாக செயற்படல் இடைநிறுத்தப்பட்டது.

31. சுதேச மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்நாட்டின் சட்டவாக்க சபை, இம்மாவட்ட நிர்வாக அலகினை தமது மக்களின் அபிலாசைகளுக்கான பிரதேச அபிவிருத்தியை ஈட்டிக்கொள்வதற்காக பயன்படுத்த முனைந்தது. அம்மாவட்டத்தின் நிருவாக பிரதானியான அரசாங்க அதிபர் ஊடாக, அபிவிருத்தியோடு தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்வேறு அரசாங்கங்கள் முயற்சித்தன. இதனால் பிரதேச அபிவிருத்தி இடைவெளிகளை இல்லாதொழித்தல், பின்னடைவு

நிலையில் காணப்பட்ட அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல், பின்தங்கிய நிலையில் உள்ள மக்களின் வறுமை போன்றவற்றை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட விசேட வேலைத்திட்டங்கள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டங்களின் அமுலாக்கம், மாவட்டத்தை மையமாகக்கொண்ட வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கும் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமென பிரதேச மட்டத்தில் காணப்பட்ட பிரதான நிருவாக மையம் நிருவாக மாவட்டம் ஆகும். அதன் பிரதானியான அரசாங்க அதிபரின் அதிகாரங்களை அதிகரிக்கச் செய்வதற்கும் அவற்றை அமுலாக்குவதற்குமாக அந்நிருவாக அலகின் வளங்களை மேம்படுத்தல் போன்றவை 1960 முதல் 1980 வரையிலான தசாப்தங்களில் பிரதேச நிருவாகத்தில் காணமுடிந்த பிரதான சிறப்பியல்புகளாக விளங்கின.

32. மேற்குறிப்பிடப்பட்ட பிரதேச அபிவிருத்தி உத்திகளை அமுலாக்கம் செய்கின்றபோது படிப்படியாக குறைபாடுகளும் தென்படத் தொடங்கின. அதிகாரிகளின் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகள், இணைப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள், தலைநகரத்தை மையமாகக் கொண்டு அமையப்பெற்றுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பன அவற்றின் தத்துவங்களை வெவ்வேறாக செயற்படுத்தியமை காரணமாக அவற்றின் கீழ் உள்ள மாவட்டங்களின் உப அலுவலகங்களின் நடவடிக்கைகள் தாமதமடைந்தமையால் அரசாங்க அதிபரின் தலைமையில் மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கென எதிர்பார்க்கப்பட்ட இணைப்பு பணிகளில் தடங்கல்கள் ஏற்பட்டமை போன்ற நிருவாகப் பலவீனங்கள் மக்கள் பிரதிநிதிகளின் குற்றச்சாட்டுக்கு இலக்காகின. முக்கியமாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் பின்னர் தேர்தல்களின்போது தனது தேர்தல் தொகுதியின் வாக்காளர் முன்னே சென்று வாக்கினைக் கோருவதற்கென அவர்களுக்கு இருந்த எதிர்கால எதிர்பார்ப்புக்களும், மக்கள் பிரதிநிதிகள் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை முறமைப்படுத்துவதன்பால் ஆர்வம் காட்டுவதற்கு ஏதுவாய் இருந்திருக்கக்கூடும். ஆதலால் பிரதேச மட்ட அபிவிருத்திச் செயன்முறையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் ஒரு நிவாரண நடவடிக்கையாக மாவட்ட மட்டத்திலுள்ள சட்டவாக்க முறையை பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் பிரதிநிதிகளின் மேற்பார்வையின் கீழ், மாவட்ட மட்டத்தில் இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளை இணைப்புச் செய்வதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குதல் இப்பிணக்கைளுக்கான ஒரு நிவாரண நடவடிக்கையாக விளங்குமென 1980களில் காணப்பட்ட அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

33. இப்பிரதேச அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாவட்ட மட்டத்திலான அரசாங்க நிறுவனத்தின் நடவடிக்கைகளை இணைப்புச் செய்வதில் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதற்கு இடமளிக்கத்தக்கவாறு கீழ் மட்டத்தில் செயற்ப்பட்ட பட்டின சபைகள், நகர சபைகள், கிராம சபைகள் ஆகிய உள்ளூராட்சி அதிகார பிரதேசங்களை ஒன்றாக இணைத்து, 1980ம் ஆண்டின் 35ம் இலக்க அபிவிருத்தி சபைகள் சட்டத்தின் கீழ் “அபிவிருத்தி சபைகள்” நிறுவப்பட்டன. மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய இச்சபைக்கு 1981ம் ஆண்டின் 20ம் இலக்க அபிவிருத்தி சபைகள் தேர்தல் சட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்திலான பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சனாதிபதியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அமைச்சர் ஒருவரின் தலைமையிலும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கியதுமான குழு ஒன்றும் இம்முறையின் கீழ் செயற்பட்டது. பிரதேச அபிவிருத்தியைத் துரிதப்படுத்துதல் இவ்வபிவிருத்தி சபைகளை நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இச்சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசின் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து பிரதேச அபிவிருத்திக்கான மாவட்ட அமைச்சர்களின் தலைமையில் வழிநடாத்தப்படுகின்ற ஒர் ஆட்சி அலகாக விளங்கியது.

34. இவ்வபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் காணப்பட்டன. அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மத்திய அரசின் மாவட்ட மட்ட நடவடிக்கைகளையும் இணைப்புச் செய்கின்ற நிறைவேற்று அதிகாரமுள்ள மாவட்ட அமைச்சரின் ஊடாக நிருவாகத்தைப் பன்முகப்படுத்துதல் அதன் முதல் நோக்கமாகும். மாவட்ட மட்ட திட்ட முறைமைகளை அமுலாக்கம் செய்கையில் அபிவிருத்தி சபைகள் ஊடாக பிரதேச வாசிகளான மக்களின் பங்களிப்பை அதற்காகப் பெற்றுக்கொள்வது அதன் இரண்டாவது நோக்கமாகும். மாவட்ட அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல், அந்நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அரசாங்க செயற் திட்டங்களை அமுலாக்கம் செய்கின்றபோது எதிர்கொள்ளவேண்டி வருகின்ற இடையூறுகளுக்கான மாற்றுத் தீர்வுகளை

முன்வைத்தல் மற்றும் பிரதேசத்திற்குள்ள திணைக்களங்களுக்கிடையிலான நடவடிக்கைகளை இணைப்புச் செய்தல் என்பன இவ்வபிவிருத்தி சபை முறைமை ஊடாக எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு பணியாகும்.

35. இம்மாவட்ட அபிவிருத்தி சபைகள் நீண்ட காலம் இயங்கவில்லை. இச்சபைகள் செயற்பட்ட பிரதேசங்களை உள்ளடக்கியவாறு, 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினூடாக "பிரதேச சபைகள்" என்ற உள்ளூராட்சி நிறுவன வகை ஒன்று அடுத்து தாபிக்கப்பட்டது.

36. மேற்குறித்த விதத்தில் பிரதேச நிருவாக நடவடிக்கைகள் பன்முகப்படுத்தப்பட்டமையினால் நீண்ட காலமாக பிரதான நகரங்களிலிருந்து தொலைதூரத்தில் வசித்த நாட்டின் பெரும்பாலான மக்கள் பிரிவினரான கிராமிய மக்களுக்கு, எதிர்பார்க்கப்பட்டவாறு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. தொடர்ச்சியாக அக்கிராமியப் பகுதிகள் இருளை நோக்கிப் பயணித்தன. இளைஞர்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினை வறுமை நிலை, காணிப் பிணக்குகள் போன்றன விவசாய சீவனோபாய வாழ்க்கை முறையை வாழ்ந்து கொண்டிருந்தவர்களில் பெருந்தொகையானோர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் காரணமாக சமூகத்தில் அதிருப்தி நிலைமையொன்று காணப்பட்டது. 1950களின் தசாப்தத்தில் இலங்கையில் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களூடாக அப்பிரதேசங்களில் மக்களைக் குடியேற்றி அப்பிரதேசங்களை விருத்தி செய்வதற்கும், அவ்விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், நாட்டின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளில் வெற்றியொன்றைக் காணமுடிந்த போதிலும் அப்பிரதேசங்களின் வதிவாளர்களின் இரண்டாம், மூன்றாம் பரம்பரைகளுக்குரியவர்கள் மீண்டும் காணிப்பிரச்சினைகளையும் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி வந்ததைத் தொடர்ந்து அப்பிரதேசங்களில் சில விசேடமான பிரச்சினைகள் உருவாகத் தொடங்கின.

37. இலங்கையில் அப்போதைய சமூகத்தில் நிலவிய இத்தகைய பிணக்குகள் காரணமாக முக்கியமாக இளைஞர்கள் அதிருப்தி நிலைக்கு ஆளாகினர். 1970களின் தசாப்தத்திலிருந்து நாட்டின் தென்னரைப்பகுதியிலும், பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அரசாங்கத்தின் ஆட்சி நடவடிக்கைகளுக்கென காட்டப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறி சிற்சில பிரதேசங்களில் சிவில் யுத்த நிலைமைகள் கூட உருவாகிற்று.

38. இப்பிரச்சினைக்குத் தீர்வைத்தேடும் முயற்சியில் 1980களில் இந்நாட்டின் அரசாங்கங்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்தன. பிரதேச அபிவிருத்தியின் நோக்கங்கனை ஆற்றிக்கொள்வதற்கும், பிரதேச மக்களுக்கு அவர்களின் பிரதிநிதிகளினூடாக ஆட்சி நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு இடமளிப்பதற்கும் மாகாண மட்டத்தில் ஏதெனுமொரு விதத்தில் சட்டங்கள்/ விதிகளை சட்டமாக்கும் அதிகாரத்துடன் கூடிய மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஆட்சி அதிகாரமொன்றாக 1987ம் ஆண்டின் மாகாண சபைகள் நிறுவப்பட்டன.

(I) மாகாண சபைகளைத் தாபித்தல்

39. பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைபுத் திருத்தத்திற்கு புதிதாக உட்சேர்க்கப்பட்ட XVIIஅ ஆம் அத்தியாயம் அமுலாகின்ற திகதியாக சனாதிபதி அவர்களினால் 1988 சனவரி மாதம் 26ம் திகதி விதிக்கப்பட்டது. (1988. 01.03 ஆந் தேதிய 491/10 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை) அரசியலமைப்பின் எட்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள ஒன்பது மாகாணங்களுக்காக ஒன்பது மாகாண சபைகளைத் தாபித்து, அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் 1988.02.05ஆம் தேதிய 491/16ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01. மேற்கு | 02. வடமேற்கு | 03. ஊவா |
| 04. சப்ரகமுவ | 05. மத்திய | 06.கிழக்கு |
| 07. தெற்கு | 08. வடமத்திய | 09. வடக்கு |

40. இலங்கை அரசியல் அமைப்பின் (154)(2)(i) ஆம் உறுப்புரைக்கமைய 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்படுகின்ற ஒரு தேர்தலூடாக மாகாண சபையொன்றுக்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற போது மாகாண சபைகள் தாபிக்கப்படுகின்றன.

(II) மாகாண சபைகள் சட்டம்

41. மாகாண சபைகளில் பின்பற்றப்பட வேண்டிய நடபடிமுறை, மாகாண அரசாங்க சேவையோடு தொடர்புடைய விடயங்கள் மற்றும் அதனோடு இடைநேர் விளைவான விடயங்களுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு சட்டமாக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம், (அமுலாக்கப்பட்ட திகதி: 1988.02.01) பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் சட்ட ஏற்பாடுகள் உள்ளிட்ட 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் ஆகிய சட்ட ஆவணங்களை மாகாண சபைகள் சட்டத்தோடு தொடர்புடைய பிரதான சட்ட ஆவணங்களாக அடையாளம் காணமுடியும்.

(III) மாகாணசபை முறைமை

42. மாகாண சபை முறைமையோடு தொடர்புடைய சட்டங்கள் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் பதின்மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தத்திலும், 1988ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளதன.

43. அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையில் மாகாண சபைகளின் பட்டியலின் கீழ் காட்டப்பட்டுள்ள முப்பத்தேழு விடயங்களோடு தொடர்புடையதாக மாகாணத்துக்குள் அமுல் செய்யப்படுவதற்கான சட்டவிதிகளை விதிக்குமதிகாரம் சிற்சில மட்டுப்பாடுகளுக்குட்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவ்வட்டவணையின் ஒருங்கிணை நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டிற்கமைய சட்ட விதிகளை விதிப்பதற்கும் மாகாணசபைகளுக்கு அதிகாரமுண்டு. ஆயினும் தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் செயற்படும் அதிகாரம் மத்திய அரசுக்கே கையளிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்காக உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய நியமணம் செய்யப்படுகின்ற பிரதிநிதிகளின் பதவிக்காலம் மாகாண சபைகளின் அங்குரார்ப்பணக் கூட்ட திகதியிலிருந்து 5 ஆண்டுகள் ஆகும்.

44. அரசியலமைப்பின் 154 ஊ ஆம் உறுப்புரைக்கமைய நேரடியாகவோ அல்லது மாகாண அமைச்சரவையின் அமைச்சர்களூடாகவோ ஒழுங்கு விதிகளை ஆக்கமுடிந்த பணிகளை அளாவிய நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்தும் தத்துவமுள்ள ஆளுநர் ஒருவர் ஒவ்வொரு மாகாண சபைக்குமாக சனபதிபதியால் நியமிக்கப்படுகின்றார். ஆளுநரின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும், அவருக்கு ஒத்துழைப்பு வழங்குதற்கும், அறிவுறுத்துவதற்கும் முதலமைச்சரின் தலைமையிலான வேறு நால்வருக்கு மேற்படாத அமைச்சர்களுடன் கூடிய அமைச்சரவையொன்றை மாகாண சபைகளிக்கு நியமனம் செய்யமுடியும். அவ்வமைச்சரவை மாகாண சபைக்கு கூட்டாக பொறுப்புக் கூறுவதற்கும் பதிலளிப்பதற்கும் கடப்பாடுடையதாக விளங்குகின்றது.

(IV) மாகாண சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

45. 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய உரிய மாகாணத்தின் இடப்பரப்பு மற்றும் சனத்தொகை தொடர்பாகக் கருத்திலெடுத்து அந்தந்த மாகாண சபையில் உள்ளடக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை சனாதிபதியினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

46. 1988 ஆண்டு பெப்புரவரி மாதம் 5 ஆம்தேதிய, 491/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் ஒவ்வொரு மாகாண சபையிலும் உள்ளடக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ள 2.1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகும்

அட்டவணை 2.1 – ஒவ்வொரு மாகாணசபையினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாகாண சபை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | மாகாண சபை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | மாகாண சபை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மேல் | 104 | சபரகமுவ | 44 | தெற்கு | 55 |
| வடமேல் | 52 | மத்திய | 58 | வடமத்திய | 33 |
| ஊவா | 34 | கிழக்கு | 37 | வடக்கு | 38 |

மூலம்: 1988.02.05 ஆந்தேதிய 491/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப்பத்திரம்

47. ஒவ்வொரு மாகாண சபையும் அம்மாகாணத்துக்குள் அமையப்பெற்றுள்ள அனைத்து நிருவாக மாவட்டங்களிலுமிருந்து தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு உரித்தான உறுப்பினர்களின் எண்ணிக்கையோடு இரண்டினைக் கூட்டுகின்றபோது கிடைக்கப்பெறுகின்ற தொகையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 3(1) ஆம் உட்பிரிவில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மாகாணமொன்றிற்காக மேலும் இரண்டு உறுப்புரிமைகள் உரிய தேர்தல் சட்டத்தின் 61 அ (2) ஆம் பிரிவிற்கமைய மாகாண சபைத் தேர்தலொன்றில் மாகாணத்திலுள்ள அனைத்து நிருவாக மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெறுகின்ற அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு உரித்தான மிகுதி ஆசனங்கள் இரண்டை வழங்குவதற்கு மாகாணமொன்றிற்கு குறித்தொதுக்கப்படுகின்றது.

(V) மாகாண சபைகளுக்கு ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை.

48. தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேர்தல்கள் சட்டத்தின் மூன்றாம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு நிருவாக மாவட்டங்களின் வதிவாளர்களின் எண்ணிக்கை, இடப்பரப்பு என்பவற்றுக்கமைய அவற்றிலிருந்து மாகாண சபைக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 1988 ஆம் ஆண்டு முதன் முதலாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுக்காக தீர்மானிக்கப்பட்டது. அதனோடு தொடர்புடைய சனத்தொகை எண்ணிக்கையாக 1981 ஆம் ஆண்டில் பொதுசனக் கணிப்பீடே அடிப்படையாக் கொள்ளப்பட்டது. தேர்தல் ஆணையாளரினால் இவ்வாறு தீர்மானிக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தலைமைச் சட்டவாக்கத்தின் 3(4) ஆம் உட்பிரிவுக்கமைய எந்தவொரு நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்தலாகாது. தேர்தல் ஆணையாளரின் தீர்மானம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

49. பொதுச் சனத் தொகைக் கணிப்பீடு (1981) மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மாவட்டங்களின் பரப்பளவிற்கமைய 1988 ஆம் ஆண்டில் முதல்முதலாக நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலுக்காக தேர்தல்கள் ஆணையாளரினால் நிருவாக மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை மேற்குறித்த 2.2 ஆம் அட்டவணையில் IIIஆம்நிரலில்காட்டப்பட்டுள்ளது.

(VI) நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்தல் தொகுதிகளுக்கமைய மாகாண சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை.

50. தலைமை சட்டவாக்கத்திற்கு புதிதாக உட்சேர்க்கப்பட்ட 3அ(2) ஆம் உட்பிரிவுக்கமைய இவ்வெல்லை நிர்ணயக் குழுவினால் மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமாக வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தேர்தல் தொகுதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்காக நிறுவப்படவுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை, இத்திருத்தச் சட்டத்தில் காட்டப்படவுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமைய குறித்தொதுக்கப்பட வேண்டியிருந்தது. தேர்தல்கள் ஆணையாளர் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டுக்கமைய, நிருவாக மாவட்டமொன்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவென விதிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50% தை நேரொத்த கிட்டிய பூரண எண்ணை கணக்கிட்டுத் தீர்மானித்தல் வேண்டும். அதற்கமைய குழுவினால் நிறுவப்படுகின்ற தேர்தல் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் தொகை, குழுவின் உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானத்திற்கமைய முடிவு செய்யப்பட்ட விதம் 1988ஆம் ஆண்டின் இலங்கையின் முதலாவது மாகாண சபை வாக்கெடுப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை ( 11 ஆம் அட்டவணை).

அட்டவணை 2.2 : தேர்தல் தொகுதிகளின் கீழ் நிருவாக மாவட்டங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட குழுவினால் தீர்மானிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாகாணம் | நிருவாக மாவட்டம் | தேர்தல்கள் ஆணையாளரினால் நிருவாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவென நிச்சயிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை (2012 ஆம் ஆண்டின் சனத்தொகைக்கணிப்பீட்டுக்கமைய) | குழுவினால் ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் அமைக்கப்படவுள்ள தேர்தல்தொகுதிகளிலிருந்து தேர்தெடுக்கப்படுவதற்கு விதிக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
| மேல் | கொழும்பு | 40 | 20 |
| | கம்பஹா | 40 | 20 |
| | களுத்துறை | 22 | 11 |
| மத்திய | மஹநுவர | 29 | 15 |
| | மாத்தளை | 11 | 06 |
| | நுவரெலியா | 16 | 08 |
| தெற்கு | காலி | 22 | 11 |
| | மாத்தறை | 17 | 09 |
| | அம்பாந்தோட்டை | 14 | 07 |

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| வடக்கு | யாழ்ப்பாணம் | 16 | 08 |
| | கிளிநொச்சி | 04 | 02 |
| | மன்னார் | 05 | 03 |
| | வவுனியா | 06 | 03 |
| | முல்லைத்தீவு | 05 | 03 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 11 | 06 |
| | அம்பாறை | 14 | 07 |
| | திருகோணமலை | 10 | 05 |
| வடமேல் | குருநாகல் | 34 | 17 |
| | புத்தளம் | 16 | 08 |
| வடமத்திய | அநுராதபுரம் | 21 | 11 |
| | பொலன்னறுவை | 10 | 05 |
| ஊவா | பதுளை | 18 | 09 |
| | மொணராகலை | 14 | 07 |
| சபரகமுவ | இரத்தினபுரி | 24 | 12 |
| | கேகாலை | 18 | 09 |

(VII). 2004ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க மாகாண சகைள் தேர்தல்கள் (திருத்த) சட்டம்

51. 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் ஆரம்ப சட்ட ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபைகள் உள்ளடக்க வேண்டிய குறிப்பான உறுப்பினர்களின் எண்ணிக்கை விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் ஏதேனுமொரு குறிப்பிட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின் பின்னர் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலொன்றிருப்பின், அச்சந்தர்ப்பத்தில்

மாகாண சபை தேர்தல்கள் சட்டத்தின் 3(அ) ஆம் பிரிவிற்கமைய மாவட்டங்களிலிருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின் தகவல்களுக்கமைய கணக்கிட்டு மீண்டும் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான சட்ட அவகாசம் காணப்பட்டது. அதற்கமைய 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாக வைத்து அதன் பின்னர் நடாத்தப்படுகின்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான கட்டளை, 2003.12.16 ஆம் தேதிய 1919/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல்கள் ஆணையாளரினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இக்கட்டளை 2004 ஆம்ஆண்டின் 5 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் நீக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் விதிக்கப்படுகின்ற கட்டளை மூலம் தீர்மானிக்கப்படுகின்ற மாகாணங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறிப்பான தீர்மானமாக ஏற்கப்பட்டு மாகாணத்தின் நிர்வாக மாவட்டங்களின் கீழான உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு நேரொத்தவாறு, புதிய சனத்தொகைக் கணிப்பீட்டை அடிப்படையாக வைத்து மாவட்டங்களுக்கு உரித்தாகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டது. அக்கட்டளைக்கமைய தீர்மானிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை கீழே உள்ள 2.3 அட்டவனையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ளது.

| அட்டவணை 2.3 : 1981 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான மக்கள் மற்றும் சனத்தொகை வீடுகளின் கணக்கெடுப்பின் பின்னர் மாகாணசபைகளுக்கு நிருவாக மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுப்பதற்கு தேர்தல் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின்எண்ணிக்கை. | | | | |
|---|---|---|---|---|
| மாகாணம் | ஆம் ஆண்டின்1987 ஆம் இலக்கச் 42 ஆம் 2 சட்டத்தின் பிரிவிற்கமைய மாகாண சபைகளுக்கு குறிப்பாக விதிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் மிகுதி ) எண்ணிக்கை (ஆசனங்கள் இன்றி | நிருவாக மாவட்டம் | ஆம் ஆண்டின் 1981 சனத்தொகைக் கணிப்பீட்டுன் பின்னர் மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட விதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகுதி ஆசனங்கள் ) (இன்றி* | ஆம் ஆண்டின் 2012 சனத்தொகைக் கணிப்பீட்டின் பின்னர் மாவட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட தேர்தல்கள் ஆணையாளரினால் விதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை |
| 1 | II | III | IV | V |
| மேல் | 102 | கொழும்பு | 43 | 40 |
| | | கம்பஹா | 36 | 40 |
| | | களுத்துறை | 23 | 22 |
| | | மொத்தம் | 102 | 102 |
| மத்திய | 56 | மஹநுவர | 28 | 29 |
| | | மாத்தளை | 11 | 11 |
| | | நுவரெலிய | 17 | 16 |
| | | மொத்தம் | 56 | 56 |
| தெற்கு | 53 | காலி | 22 | 22 |
| | | மாத்தறை | 17 | 17 |
| | | அம்பாந்தோட்டை | 14 | 14 |
| | | மொத்தம் | 53 | 53 |
| வடக்கு | 36 | யாழ்ப்பாணம் | 19 | 16 |
| | | கிளிநொச்சி | 05 | 04 |
| | | மன்னார் | 03 | 05 |
| | | வவுனியா | 05 | 06 |
| | | முல்லைத்தீவு | 04 | 05 |
| | | மொத்தம் | 36 | 36 |
| கிழக்கு | 35 | மட்டக்களப்பு | 11 | 11 |
| | | அம்பாறை | 14 | 14 |
| | | திருகோணமலை | 10 | 10 |
| | | மொத்தம் | 35 | 35 |
| வடமேல் | 50 | குருநாகல் | 35 | 34 |
| | | புத்தளம் | 15 | 16 |
| | | மொத்தம் | 50 | 50 |
| வடமத்திய | 31 | அநுராதபுரம் | 21 | 21 |
| | | பொலன்னறுவை | 10 | 10 |
| | | மொத்தம் | 31 | 31 |
| ஊவா | 32 | பதுளை | 19 | 18 |
| | | மொனராகலை | 13 | 14 |
| | | மொத்தம் | 32 | 32 |
| சப்ரகமுவ | 42 | இரத்தினபுரி | 23 | 24 |
| | | கேகாலை | 19 | 18 |
| | | மொத்தம் | 42 | 42 |

மூலம்: 1988ஆம் ஆண்டின் இலங்கையின் முதலாவது மாகாண சபை வாக்கெடுப்பு தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை ( 11 ஆம் அட்டவணை)

(VIII). புதிய மாகாண சபைத் தேர்தல் முறைமைக்கமைய மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் செயன்முறை.

(அ). மாகாணத்தின் நிருவாக மாவட்டங்களின் தொகுதிகளுக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் மாவட்டம் சார்பாக போட்டியிடுவதற்கு பெயர் குறிக்கப்படுகின்ற வேட்பாளர்களின் பெயர்களை உள்ளடக்கிய மாவட்டப் பெயர்ப் பட்டியல் என்ற வகையிலான இரண்டு பெயர்ப் பட்டியல்கள் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் வேட்புமனுத் தாக்கலின் போது சமர்ப்பிக்கப்படும்.

(ஆ). வேட்புமனுப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 25% த்தினர் பெண்களாக இருக்கவேண்டுமென்ற தேவைப்பாடு காணப்படுகின்றது. (இவ்வாறு வேட்புமனுப் பத்திரமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண்வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக முன் கூட்டியே ஆணைக்குழுவினால் அறிவூட்டப்படும்)

(இ). வாக்காளர், வாக்குச் சீட்டில் , தேர்தல் தொகுதிக்காக வேட்பாளர்கள் முன்வைக்கின்ற கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்கினை அடையாளமிடல் வேண்டும்.

(ஈ). ஒவ்வொரு தேர்தல் தொகுதியின் கீழும் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களை வாக்காளர் தெரிந்து கொள்வதற்காக வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்கள் வாக்களிப்பு நிலைய வளவிற்குள் தெரிவத்தாட்சி அலுவலரினால் காட்சிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக சட்டத்தில் குறிப்பிடப்படாத போதிலும் தேர்தல்களின் போது மேற்கொள்ளப்படுகின்றவாறு வாக்காளர்களின் இவ்விபரங்களுடன் கூடிய அறிவித்தலொன்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

(உ) அத்தொகுதியொன்றின் கீழ் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களில் அதிக வாக்குகளைப் பெற்றுக்கொளகின்ற தரப்பினை (கட்சி/ குழு) பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளர் தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(ஊ) கட்சிகள் மற்றும் குழுக்கள், தேர்தலின்போது மாவட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள மொத்த செல்லுபடியான வாக்குகளை நிருவாக மாவட்டம் சார்பாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள மொத்த உறுப்பினரின் எண்ணிக்கையினால் (தொகுதிவாரியாகவும் மாவட்ட அடிப்படையிலும்) வகுப்பதன் மூலம் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏதேனுமொரு கட்சி அல்லது குழு உரித்துப் பெறுவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை (விளை தொகை) கணிப்பிடப்படும்.

(எ). ஒவ்வொரு கட்சிக்கும் /குழுவுக்கும் உரித்தாகின்ற ஆசனங்களின் எண்ணிக்கை கட்சிகள்/ குழுக்கள் பெற்றுக் கொள்கின்ற வாக்குகளின் எண்ணிக்கையை விளைதொகையால் வகுத்து வெவ்வேறாகக் கண்டறியப்படுதல் வாக்கெண்ணலின் அடுத்த கட்டமாகும்.

(ஏ). ஏதேனுமொரு கட்சி அல்லது குழு அக்கட்சியின் வாக்குகளின் எண்ணிக்கயை விளைதொகையினால் வகுத்ததன் பின்னர் பெற்றுக்கொள்கின்ற “ உறுப்புரிமையிலும் “ பார்க்க அதிக உறுப்புரிமைகளை தொகுதி மட்டத்தில் போட்டியிட்டுப் பெற்றுக்கொள்ளுமாயின், அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்கு மாவட்டப் பட்டியலிலிருந்து உறுப்பினர்களைத் தேர்தெடுக்கும் உரித்துக் கிடையாது.

எனினும் இவ்வாறு கணிப்பிடுகின்றபோது ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு உறுப்புரிமையின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் அக்கட்சியை அல்லது குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களாக தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவிடத்து எஞ்சியுள்ள உறுப்பினர்களை தமது மாவட்ட வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலிலுள்ள வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு அக்கட்சிக்கு/ குழுவுக்கு அவகாசம் உண்டு.

இணைப்பு – 5

## கணக்காய்வாளர் நாயகத்தின் குறித்துரைகள்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ජේපීඒ/ඊ/02/ඩීසී/2017/ඩී/21

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 මැයි 02 දින.

අධ්‍යක්ෂ ජනරාල්,

රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව.

DELIMITATION COMMISSION
08 MAY 2018
COLOMBO - 05

විසර්ජන ගිණුම -2017

ශීර්ෂ 25 - සීමා නිර්ණය කොමිෂන් සභාව

------------------------------------------------

2017 දෙසැම්බර් 13 දිනැති අංක 259/2017 දරන රාජ්‍ය ගිණුම් චක්‍රලේඛය ප්‍රකාරව පිළියෙල කර විගණනයට ඉදිරිපත් කර තිබූ විසර්ජන ගිණුමට අදාළ විගණන නිරීක්ෂණ හා සහතික කරන ලද විසර්ජන ගිණුම ( සිංහල, ඉංග්‍රීසි, දෙමළ) මේ සමඟ එවා ඇත.

කේ.කේ.වී. ධර්මසිරි

නියෝජ්‍ය විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත - සභාපති , සීමා නිර්ණය කොමිෂන් සභාව

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ජේපීඒ/ඊ/02/ඩීසී/2017/ඩී/21

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2018 මැයි 02 දින.

අධ්‍යක්‍ෂ ජනරාල්,
රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව.

ශීර්ෂ 25 - සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2017 වර්ෂයේ විසර්ජන ගිණුම පිළිබඳව විගණකාධිපති වාර්තාව

------------------------------------------------------------------------------------------------------------------------

ශීර්ෂ 25 - සීමා නිර්ණය කොමිෂන් සභාවේ 2017 වර්ෂය සඳහා වූ 2017 දෙසැම්බර් 13 දිනැති අංක 259/2017 දරන රාජ්‍ය ගිණුම් චක්‍රලේඛයේ සඳහන් ඩීජීඑස්ඒ 1 ආකෘතියේ සිට 10 ආකෘතිය දක්වා ආකෘතිද , සටහන (i) සිට සටහන (iv) දක්වා වූ තොරතුරු සාරාංශයකින් සමන්විත 2017 වර්ෂය සඳහා වූ විසර්ජන ගිණුම ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 148, 149, 150, හා 152 ව්‍යවස්ථාවන්ට, 2017 අංක 32 දරන විසර්ජන ( සංශෝධන) පනතින් සංශෝධිත 2016 අංක 24 දරන විසර්ජන පනත හා වෙනත් ව්‍යවස්ථාපිත විධිවිධානයන්ට, 2017 වාර්ෂික අයවැය ඇස්තමේන්තුවට, ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් රෙගුලාසි සංග්‍රහයේ විධිවිධාන ඇතුළත් රාජ්‍ය මූල්‍ය හා පරිපාලන රෙගුලාසිවලට අනුකූලව පිළියෙල කර ඉදිරිපත් කරන ලද විසර්ජන ගිණුම, ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2017 දෙසැම්බර් 13 දිනැති අංක 259/ 2017 දරන රාජ්‍ය ගිණුම් චක්‍රලේඛය සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ මුදල් රෙගුලාසි සංග්‍රහයේ මුදල් රෙගුලාසි 150 ප්‍රකාරව රාජ්‍ය ගිණුම් අධ්‍යක්‍ෂ ජනරාල්වරයා විසින් ප්‍රසිද්ධ කළ යුතු විසර්ජන ගිණුම සම්බන්ධයෙන් වූ මාගේ නිරීක්‍ෂණයන් මෙම වාර්තාවේ දැක්වේ.

**2. විගණන විෂය පථය**

----------------------

විසර්ජන ගිණුමේ දැක්වෙන අගයන් සහ හෙළිදරව් කිරීම්වලට උපකාරීවන 2017 අංක 32 දරන විසර්ජන ( සංශෝධන) පනතින් සංශෝධිත 2016 අංක 24 දරන විසර්ජන පනතින් පාර්ලිමේන්තුව විසින් නිශ්චය කරන ලද වියදම් සීමාවන් තුළ උපයෝජනයන් සිදු කලේද යන්න හා විගණන සාක්ෂි ලබා ගැනීම පිණිස පරිපාටි ක්‍රියාත්මක කිරීම විගණනයට ඇතුළත් වේ. තෝරාගත් පරිපාටීන්, වංචා

